

உ

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்"



சங்கானைக் கல்விக்கோட்டம்

# சைவ கலாசார மேம்பாட்டு விழா



## தசாப்த நிறைவையொட்டிய

# சிறப்பு மலர்

## 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/800/890

உ




"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்"



## சங்கானைக் கல்விக்கோட்டம்

# சைவ கலாசார மேம்பாட்டு விழாவும் பரிசளிப்பு வைபவமும்



இடம் :- யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்

காலம் :- பார்த்திப வருஷ ஐப்பசி
12ம் நாள் 29.10.2005 சனிக்கிழமை
காலை.8.00 மணி

தலைவர் :- திரு.நா.சண்முகசுந்தரம் அவர்கள்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், சங்கானைக் கல்விக் கோட்டம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிநிரல்

☛ **காலை 8.00 மணி**

பூஜையும் வழிபாடும் (பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி தேவஸ்தானத்தில்)

☛ **காலை 8.30 மணி**

பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி தேவஸ்தானத்தில் இருந்து திரு.சி.சிவகுமார் குழுவினரின் நாதஸ்வர இசையுடன் திருநிறைச் சுவடிகளுடனும் சமய குரவர்கள் திருவுருவப் படங்களுடனும் ஊர்வலமாக தொல்புரம் வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தை வந்தடைந்து அங்கு நடைபெறும் பூஜை வழிபாட்டைத் தொடர்ந்து விழா மண்டபத்தை அடைதல்.

☛ **காலை 9.30 மணி** மங்கள விளக்கேற்றலும் இறை வணக்கமும்

☛ **காலை 9.40 மணி**

**வரவேற்பு நடனம் :-** யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவிகள்

☛ **காலை 9.45 மணி**

**வரவேற்புரை :-** **திருமதி.ஜெ.திருமூர்த்தி** அவர்கள்
(ஆசிரியர்,யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வித்தி)

☛ **காலை 9.50 மணி**

**ஆசியுரை :-**

✤ **சிவஸ்ரீ ச.சுந்தரராஜக் குருக்கள்**
(வழக்கம்பரை, முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)

✤ **பண்டிதர் சிவஸ்ரீ தி.பொன்னம்பலவாணர்**
(பொன்னாலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பிரதமகுரு)

☛ **காலை 10.10 மணி**

**தலைமையுரை :-** **நா.சண்முகசுந்தரம்** அவர்கள்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், சங்கானை)

☛ **காலை 10.20 மணி**

**வாழ்த்துரைகள் :-**

✤ **திரு.ப.விக்கினேஸ்வரன்** அவர்கள்
(பணிப்பாளர், வலிகாமம் வலயம்)

✤ **திருமதி.றெஜினா இருதயநாதன்** அவர்கள்
(கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி வலயம்)

✤ **திருமதி. தே. பாபு** அவர்கள்
(உப பிரதேசசெயலர், வலி-மேற்கு,சங்கானை.)

✤ **திரு.பொ.அச்சுதம்பிள்ளை** அவர்கள்
(முகாமையாளர், மக்கள் வங்கி, சங்கானை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☛ **காலை 11.00 மணி**

**விழா மலர் வெளியீடும் ஆசியுரையும் :-**

திரு.சு.சுந்தரசிவம் அவர்கள்
(பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலி. கல்வி வலயம்)

☛ **காலை 11.20 மணி**

**கௌரவிப்பு நிகழ்வு- சங்கானை கல்விக்கோட்டத்தின் சைவ கலாசார மேம்பாட்டிற்கு அளப்பரிய சேவையாற்றிய சேவையாளர்களைக் கௌரவித்தல்.**

1) திரு.ப.விக்கினேஸ்வரன் அவர்கள்
(வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்)

2) திரு.அ.தற்பரானந்தன் அவர்கள்
(ஓய்வுபெற்ற உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர்)

3) திரு.ஆ.வ.கணேசலிங்கம் அவர்கள்
(ஓய்வுபெற்ற சங்கானைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர்)

4) திரு.சி.செல்லையா அவர்கள்
(ஓய்வுபெற்ற சங்கானைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர்)

5) திரு.நா.சண்முகசுந்தரம் அவர்கள்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், சங்கானைக் கல்விக்கோட்டம்)

6) திரு.க.இரத்தினேஸ்வரன் அவர்கள்
(ஓய்வுபெற்ற அதிபர், யா/பண்ணாகம் வடக்கு, அ.மி.த.க.பாடசாலை)

7) திரு.சி.சச்சிதானந்தம் அவர்கள்
(உரிமையாளர், சச்சியா இரும்பகம், வட்டுக்கோட்டை)

☛ **பகல் 11.40 மணி**

**சிறப்புரை** :- திரு.கு.சண்முகநாதன் அவர்கள்
(பிரதிக்கல்விப் பணிப்பாளர், மாணவர் அபிவிருத்தி, வலிகாமம் கல்வி வலயம்)

☛ **மதியம் 12.00 மணி**

முதன்மையுரை :- கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள்

☛ **பகல் 12.20 மணி**

**மாணவர் நிகழ்ச்சிகள்:-**

**மனனம்**
**பண்ணிசை**
**புராணபடனம்**
**கதாப்பிரசங்கம்**

☛ **பி.ப. 1.20 - 2.20 மணி :- பரிசில் வழங்கல்**

☛ **நன்றியுரை** :- திரு.வி.நடராசா அவர்கள்
(அதிபர், யா/மெய்கண்டான் மகா வித்தியாலயம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சங்கானைக் கல்விக் கோட்டம்,
சித்தன்கேணி.
29.10.2005

கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்,
நலன்விரும்பிகள்

## தலைவர்

திரு.நா.சண்முகசுந்தரம் (கோட்டக்கல்விப் பணிப்பாளர், சங்கானை)

## செயலாளர்

திரு.வீ.நடராசா (அதிபர், யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்)

## உப செயலாளர்

திரு.ந.சபாரத்தினசிங்கி (அதிபர்,யா/வட்டு மத்திய கல்லூரி)

## பொருளாளர்

திருமதி.செ.செல்லையா (அதிபர்,யா/சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க. பாடசாலை

## செயற்குழுவினர்

| | |
|---|---|
| தர்மதீபம் ப.சிவலோகநாததேசிகர் | (ஆசிரியர், யா/பிளவத்தை அ.மி.த.க.பாட.) |
| திரு.ச.இராமலிங்கம் | (அதிபர், யா/வட்டு இந்துக் கல்லூரி) |
| திரு.மு.ஜெயகுமார் | (அதிபர், யா/தொல்புரம் விக்னேஸ்வரா வி.) |
| திரு.க.சந்திரசேகரன் | (அதிபர், யா/சித்தன்கேணி ஸ்ரீகணேசா வி.) |
| திரு.ந.சிவசுப்பிரமணியம் | (அதிபர், யா/வட்டு கார்த்திகேய வித்தி.) |
| திரு.சி.சிவகணேசசுந்தரன் | (அதிபர், யா/சுழி. ஐக்கியசங்க இந்து வித்) |
| திருமதி.ச.யோகேஸ்வரன் | (அதிபர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி) |
| திருமதி.ஜெ.தர்மராசா | (அதிபர், யா/அராலி கிழக்கு அ.மி.த.க.பா ) |
| திரு.க.ஹரிஹரசக்தி | (அதிபர், யா/பண்.வடக்கு அ.மி.த.க.பாட) |
| திருமதி.ஜெ.திருமூர்த்தி | (ஆசிரியை, யா/பண். மெய்கண்டான் ம.வி.) |
| திரு.ந.விக்னேஷ்வரமூர்த்தி | (அதிபர், யா/அராலி வடக்கு அ.மி.த.க.பா) |
| திரு.த.கடம்பானந்தன் | (அதிபர், யா/திருவடிநிலை தமிழ் வித்தி) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

பருத்தித்துறை வீதி, நல்லூர்,

யாழ்ப்பாணம், இலங்கை

# அருளாசிச்செய்தி

அன்புசால் பெருந்தகையினருக்கு,

சங்கானை கல்விக்கோட்டம் சைவத் திருமுறை விழா பத்து வருடங்கள் பூர்த்தியாவதை யிட்டு மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம். ஒவ்வொரு வருடமும் நடைபெறும் இவ்விழா சங்கானைக் கோட்டத்திற்குள் வரும் பாடசாலை மாணவ மாணவியருக்கு திருமுறை ஓதுதல், மாலை தொடுத்தல், கோலமிடுதல், தோறணம் பின்னுதல், புராணபடலம், கதாபிரசங்கம் போன்ற சமய விடயங்களை மாணவ பருவத்திலேயே கற்றுக்கொள்ள வேண்டும் என்ற வகையில் போட்டிகள் ஊடாக மாணவ மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் இந்நிகழ்ச்சி நடைபெறுவது மாணவருக்கும் பெற்றோருக்கும் அதிபர், ஆசிரியர் அனைவரிற்கும் பயனுள்ளதாக அமைகின்றது. இந்நிகழ்ச்சியைச் சிறப்பாக நடாத்தும் அனைத்து கல்விக் கோட்ட உத்தியோகத்தர்களையும் வாழ்த்துகின்றோம். இந்நிகழ்ச்சியினூடாக வளர்ந்துவரும் மாணவர் சமுதாயத் திற்கு பயனுள்ளதாக அமையும் என்பதில் ஐயமில்லை. தொடர்ந்து இந்நிகழ்ச்சி நடைபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். எல்லோரையும் இறைவன் ஆசீர்வதிப் பாராக.

**என்றும் வேண்டும் இன்ப அன்பு**

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**

**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடாதிபதி
## சுவாமி ஸ்ரீ ராஜ்குமார்

# வாழ்த்துரை

சங்கானைக் கல்விக்கோட்டத்தினால் வருடா வருடம் நடாத்தப்பட்டுவரும் சைவத்திருமுறை விழா மிகவும் சிறப்பான முறையிலும் தொடர்ந்து ஊக்கத்துடனும் பயன்தரக் கூடிய பாதையிலும் இட்டுச் செல்வதும் மெச்சக்கூடிய விடயமாகும்.

இத்தெய்வத்திருமுறை விழாவினால் மக்களின் மனம் பண்படுத்தப்பட்டு ஆத்மீக உணர்வை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது. இதனால் அவர்கள் எல்லோருடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகக் கூடியவர்களாகவும், இத்திருமுறைகளை மிகவும் பொறுமையுடன் இருந்து உச்சரித்து வருவதனால் எதிலும் பொறுமையுடன் செயலாற்றக் கூடியவர்களாகவும் இறை சிந்தனையுடையவர்களாகவும் திகழக்கூடிய வாய்ப்பினைக் கொடுக்கக்கூடிய அளவிற்கு இவ்விழா அமையப்பெற்றுள்ளது. இவ்வளவு ஒழுக்கங்களும் ஒரு மாணவனில் ஒருங்கமைந்து காணப்படுமாயின் அவனால் இவ்வுலகில் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை.

மற்றும் மாணவர்களுடைய பேச்சுப்போட்டி, பண்ணிசைப் போட்டி, தோறணம் பின்னுதல், மாலை தொடுத்தல் போன்ற பல்வேறு துறைகளிலும் முன்னேற்றமடையக் கூடிய வகையில் போட்டிகள் வைத்து அவர்களை உற்சாகமுடையவர்களாக வும், விழிப்புணர்வு உடையவர்களாகவும் மாற்றியமைக்கக் கூடிய ஓர் வழிகாட்டியாகவும் அமைந்திருக்கின்றது.

ஆகவே இப்படி ஓர் பயன்தரக்கூடிய இத்திருமுறை விழாவை ஆண்டுதோறும் நடாத்திவரும் சங்கானைக் கல்விக்கோட்டம் பத்து வருடங்களாக மிகச் சிறப்பாக நடாத்திவருவதைப் பாராட்டி ஆசீர்வதித்துக்கொள்கின்றேன். ஸ்ரீகாயத்திரி தேவியின் 64 கலைகளும் பெற்று வாழ்க வளமுடன்! வாழ்க வளமுடன்!! வாழ்க வையகம்!!!

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

**ஸ்ரீ காயத்திரிபீடம்,**
**86, பலாலி வீதி,**
**திருநெல்வேலி,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## தெல்லிப்பளை, இலங்கை.

# ஆசியுரை

சைவத்திருமுறைகளுக்கு ஏற்றம் கொடுத்து வாழ வேண்டிய கடமை சைவப் பெருமக்களுக்கு உண்டு. எமது சைவ வாழ்வு பற்றி நோக்கும் பொழுது பல வழிகளில் திருமுறைகள் எம்மை நெறிப்படுத்துகின்றன. முதலாவது திருமுறை தொடக்கம் பன்னிரண்டாம் திருமுறை வரையும் தில்லையம்பலவனின் முத்திரை பொறிக்கப்பட்டவையாகும். திருச்சிற்றம்பலம் என்ற இந்த முத்திரை திருமுறைகளுக்கு அருள் உயிர்ப்பைக் கொடுக்கிறது. எங்கும் எதிலும் சிவமயம் என்பதும் தில்லையம்பலவனே தான் என்று ஆடி உலகை இயக்குகிறான் என்பதும் அருளாளர்கள் கண்ட பேருண்மை யாகும். எனவே இவற்றுக்கெல்லாம் மதிப்புக் கொடுத்து ஆண்டு தோறும் சங்கானைக் கல்விக்கோட்டம் நடாத்தும் சைவத்திருமுறை விழா வரவேற்கத்தக்கது. ஆடல் வல்லானின் அசைவு எமது இருதயத் துடிப்பாகும். ஆன்மார்த்தமாக நோக்கும் போது திருமுறைகள் எம்மை வாழ வைப்பனவாகும்.

**"ஆசையறாய் பாசம் விடாய் ஆனசிவ பூசை பண்ணாய்**
**நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் - சீசீ**
**சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்**
**மனமே உனக் கென்ன வாய்"**

என்ற பாடல் சைவ மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டிய கருத்தை வெளிப்படுத்துகிறது. ""மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்"" என்று பாடும் பொழுதே மகிழ்ச்சியான வாழ்வு எம்மை நோக்கி வருகிறது. இந்த வகையில் திருமுறைகளைப் போற்றுவோம். சங்கானைக் கல்விக் கோட்டம் தசாப்த காலங்களாக சிறந்த முறையில் செயலாற்றி வருவது போற்றுதற்குரியதாகும். இவிழாவின் மலருக்கு ஆசியுரை வழங்குவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். எங்கள் வாழ்வை திருமுறைகள் ஓதி மலரச் செய்வோம் என்று கூறி அமைகின்றேன்.

**கலாநிதி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி,**
சமாதான நீதிபதி,
தலைவர், ஸ்ரீ துக்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பளை, ஸ்ரீலங்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின்
உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர்
சிவ.மகாலிங்கம் அவர்கள் விடுக்கும்

# ஆசிச்செய்தி

சிவனுக்குள்ளே சிவமணம் பூத்த ஞானச் செல்வர்களாகிய அருளாளர்களால் அருளைப்பெற்ற அருச்சனை மலர்களே பன்னிரு திருமுறைகள் ஆகும். தெய்வத் தமிழாகிய திருமுறைகள் சைவத் தமிழர்களின் கருவூலம், இறையருளை அனைவரும் உணர்வதற்கு வழிகாட்டும் திசைகாட்டி, வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டும் ஞானப் பெருநூல் எனப் பல வழிகளிலே பரிமாணம் பெற்றுப் பிரகாசிக்கும் உயர் நூல் ஆகும். மனிதன் புனிதன் ஆவதற்கும் இவ்வுலக வாழ்விலே சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு பெறுவதற்கும் வாழ்வின் இறுதி இலட்சியமாகிய சிவஞான முத்தியும் கிடைப்பதற்கும் வழிகாட்டும் ஆப்த வாக்கியங்களாகத் திருமுறைகள் திகழ்கின்றன.

திருமறைக்காட்டில் வேதங்களால் பூட்டப்பட்ட கதவினை அப்பர் பெருமான் தேவாரம் பாடியே திறந்தார். இறைவனைப் பாடிப் பரவிப் பணிந்து வணங்குவது அவருக்கு நாம் நேரடியாகச் செய்யும் அர்ச்சனை என்பதை ''அர்ச்சனை பாட்டேயாகும், ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்'' எனப் பெரியபுராணம் குறிப்பிடுகிறது. தேவாரம் என்பதன் பொருள் ''தெய்வத்திற்குச் சூட்டப்படும் பாமாலை என்பதாகும். ஆரம்ப காலத்தில் சம்பந்தருடைய பாட்டுக்கள் திருக்கடைக்காப்பு என்றும் அப்பருடைய பாடல்கள் தேவாரம் என்றும் சுந்தரருடைய பாடல்கள் திருப்பாட்டு என்றும் அழைக்கப்பட்டன. காலப்போக்கில் மூவருடைய பாடல்களும் ''தேவாரம்'' என்ற பொதுப் பெயரால் அழைக்கப்படும் நிலை தோன்றியது.

சைவப் பாடசாலைகளின் ஊடாக மாணவர்களுக்கு சமய அறிவு புகட்டப்படல் வேண்டும் என்பது நாவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானின் சிந்தனையாகும். சைவப் பாடசாலைகள், இந்துக் கல்லூரிகளில் கற்பித்த ஆசிரியர்கள் கோலமும் சீலமும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவர்களாக இருந்து தாம் கற்பிக்கும் மாணவர்களைச் சைவ ஆசார சீலர்களாக உருவாக்குவதற்காக தமது வாழ்வையே பரித்தியாகம் செய்த ஒரு பாரம்பரியம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவியது. திசையறி கருவி எப்பொழுதும் வடக்குத் திசையைக் காட்டுவது போல சைவப் பண்பாட்டுப் பாரம்பரிய அடித்தளத்தில் உருவாக்கப்படும் மாணவர்கள் உலகின் எந்த நாட்டிற்குச் சென்றாலும் நெறி பிசகாதவர்களாக வாழ்வார்கள்.

சங்கானைக் கல்விக் கோட்டத்தினர் சைவத் திருமுறை விழாவினை கடந்த பத்து வருடங்களாகத் தொடர்ந்து சிறப்பாக நடாத்தி வருகிறார்கள். மாணவர்களிடம் சமய விழிப்புணர்வினை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு வகையான போட்டிகளை நடாத்திப் பரிசில்களை வழங்கி நன் முயற்சியிலே சிறப்பாக ஈடுபட்டுவரும் சங்கானைக் கல்விக்கோட்டக் கல்வி அதிகாரியையும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் வாழ்த்தி ஆசி கூறுவதோடு உங்கள் அனைவருக்கும் எல்லாம்வல்ல பெருமானின் பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் திருவருள் பூரணமாகக் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

**சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம்**

உதவிப் பணிப்பாளர் (இந்து விவகாரம்),
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,
கொழும்பு 04.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர்

# வாழ்த்துரை

ஆண்டுதோறும் சங்கானைக் கல்விக்கோட்டம் நடாத்தும் சைவத் திருமுறை விழாவின் தசாப்த நிறைவையொட்டிய சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகிறேன். பாடசாலை மட்டத்தில் அனைத்து மாணவர்களையும் திருமுறை விழாவையொட்டி நடைபெறும் போட்டிகளில் ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களது மறைந்து கிடக்கும் ஆற்றல்கள் வெளிவருவது மட்டுமல்லாது நல்லொழுக்கமுடையவராயும், சைவநெறி முறையில் வாழவும் கற்றுக் கொள்வார்கள்.

மாணவர்களின் ஆன்மீக சிந்தனைகளை மேம்படுத்த எடுக்கும் இவ்விழா சிறப்புற வாழ்துகிறேன். இப்பணியில் ஈடுபடும் அனைவரையும் பாராட்டுவதுடன் வருடந்தோறும் இவ்விழா தொடரவும் இறையருளைப் பிரார்த்திக்கிறேன்.

**திரு.ப.விக்னேஸ்வரன்**

வலயக்கல்விப் பணிப்பாளர்,
சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# கோட்டக்கல்விப் பணிப்பாளர்
# சங்கானைக் கல்விக் கோட்டம்

# வாழ்த்துரை

தாமச குணங்கள் மலிந்துவிட்ட இன்றைய சூழ்நிலையிலே சாத்வீக குணங்களை வளர்த்தெடுக்கும் நோக்கில் இவ்விழா எடுக்கப்படுகிறது. சகல ஜீவராசிகள் மீதும் அன்பு செலுத்தி அதன் மூலம் இறைவனை அடைவதுவே மனித வாழ்வின் தத்துவம். ஆனால் நாட்டில் நடப்பதுவோ இதற்கு எதிர்மாறான செயற்பாடுகளே. இச்சூழ்நிலையில் சங்கானைக் கல்விக்கோட்ட கல்விச் சமூகத்தினர் யாபேரும் சேர்ந்து இவ்வாறானதொரு பெருவிழாவினை எடுப்பது காலத்திற்குப் பொருத்தமான, போற்றத்தக்க ஒரு முயற்சியாகும். இன்றைய விழா வருடாந்த விழாவாக மட்டுமன்றி 10வது ஆண்டு நிறைவு விழாவாகவும் அமைவதையிட்டு நாம் எல்லோரும் பெருமிதமடைகின்றோம். இந்நிலையில் இவ்விழாவினை தொடக்கிவைத்த எமது கல்விப் பணிப்பாளர் திரு.ப.விக்கினேஸ்வரன் அவர்களையும் அவருக்கு உறுதுணையாக இருந்து செயற்பட்ட திரு.அ.தற்பரானந்தன் அவர்களையும் நினைவுகூருவது ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும். இந்து மதமே மனித குலம் யாபேருக்கும் பொதுவாக அமையக்கூடிய சிறந்த மதம் என 1891ம் ஆண்டு சிக்காகோ நகரில் நடைபெற்ற சர்வமத மகாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட, நிரூபிக்கப்பட்ட ஒரு உண்மையாகும். இருப்பினும் இன்று பல காரணங்களைப் பின்னணியாகக் கொண்டு எம்மத்தியில் மதம்மாற்ற செயற்பாடுகள் அசுர வேகத்தில் நடைபெற்று வருகின்றன. இதன் பின்னணியை விளங்க முடியாத அப்பாவி மக்கள் இந்த வலையில் விழுந்து விரிவினைகளையும் முரண்பாடுகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கி அமைதிநிலையைக் கெடுத்துக்கொண்டிருப்பதுடன் வெளிநாட்டு சக்திகளுக்கும் விலைபோய்க்கொண்டு இருக்கின்றார்கள். அல்லலப்படுகின்றோம், அவதிப்படுகின் றோம் ஆனால் அதற்கான காரணம் தெரியாது கலங்குகின்றோம். இந்நிலையில் இவற்றிற்கெல்லாம் வழிகாட்டுமாப்போல் இச்சைவசமய எழுச்சி விழா அமைவதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இவ்விழா சிறப்புற அமைய எல்லாம்வல்ல இறைவனை அருள்புரிய வேண்டிப் பிரார்த்திப்போமாக.

திரு. நா. சண்முகசுந்தரம்,
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
சங்கானைக் கல்விக் கோட்டம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அவர்களால் வழங்கப்பெற்றது

# வரலாற்றுத் தேவைக்கு வழிசமைக்கும்....

சங்கானைக் கல்விக்கோட்டம் வருடாவருடம் எடுத்துவரும் திருமுறை பெருவிழா இம்முறை பத்தாவது வருட நிறைவாக எடுக்கப்படுவதையிட்டு என் பாராட்டுக்கள். அவ்விழாவையொட்டி வெளியிடப்படவுள்ள விழா சிறப்பு மலருக்கு ஆசியுரை வழங்க எனக்குக் கிடைத்த சந்தர்ப்பம் என் பாக்கியமே. விழாக்களின் முன்னெடுப்புக்கள் சம்பிரதாயபூர்வமாக அன்றி வரலாற்றின் தேவையை உணர்த்தி நிற்க வேண்டும். ஆலயங்களும் அங்கு நடைபெறும் விழாக்களும் சமய பெருவிழாக்களும் கலாசார விழாக்களும் இதற்கு விதிவிலக்கு அல்ல. நீண்ட பெரிய யுத்தத்திற்கு பின்னரும், சுனாமி அனர்த்தப் பாதிப்புக்களின் பின்னரும் எமது பிரதேசம் பலவகையான பின்தள்ளலுக்குட் பட்டுள்ளது. சிறுவர் முதல் பெரியோர் வரை உள ரீதியாகப் பாதிப்படைந்துள்ளனர். பல்வேறு பொருளாதார நெருக்கடி களைச் சந்தித்துள்ளனர். கல்வியில் பாரிய பின்னடைவை எதிர்நோக்கியுள்ளனர். சுருங்கக் கூறின் பல்வேறு பிரதேசங்கள் ஆரம்பம்தொட்டு புனர்நிர்மாணம் செய்ய வேண்டியுள்ளது. இதனை மறுசீரமைக்கும் வரலாற்றுக் கடமை எம்மவர் ஒவ்வொருவர் முன்னாலும் உள்ளது. எடுக்கப்படும் ஒவ்வொரு விழாவிற்குப் பின்னாலும் இது உள்வாங்கப்படவேண்டியுள்ளது. இத்தகைய வரலாற்றுக் கடமைக்கு வழிசமைக்கும் பெரு விழாவாக இவ்விழா அமைய என் நல்லாசிகள் உரித்தாகட்டும்.

**நன்றி.**

**“வாழ்க திருமுறை விழா**
**வளர்க அதன் வரலாற்றுப் பார்வை”**

**திரு. சி. செல்லையா,**
முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர்
சங்கானைக் கல்விக் கோட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## வலி மேற்கு சங்கானை பிரதேச செயலர் அவர்களால் அன்புடன் வழங்கும்

# பாராட்டுப் பதவுரைகள்

சைவமும் தமிழும் தகவுடன் மிளிர வலி.மேற்கு பிரதேசத்தின் கல்விக் கூடங்களில் மாணவர்களிடையே இவ்விரண்டு பரப்புரைகளையும் பெருக்குமுகமாக நிறுவப்பட்டதே சங்கானைக் கல்விக்கோட்ட சைவ கலாசார மேம்பாட்டு அமைப்பாகும்.

அவ்வகையில் கடந்த 10 ஆண்டுகளாக இப்பேரவையினர் சைவத்தமிழ் கலாச்சாரத்தை பாடசாலை மாணவ மாணவியர் மத்தியில் மட்டுமன்றி மக்கள் மத்தியிலும் நிலை நிறுத்துவதில் நீள நின்று பணிபுரிந்து வருகின்றனர். மனித மனங்களின் மனப்பிணி அகற்றுவதில் இச்சபையின் பணிகளானவை நனிசிறந்து விளங்குவதுடன் பல்வேறு சைவத்தமிழ் கலாசார நடவடிக்கைகளை மாணவர் மத்தியில் புத்துணர்வு வழங்கும் வகையில் அறிமுகப்படுத்தி அவற்றில் அவர்களின் செயற்படுதிறனை வளர்ப்பிக்கும் வளமான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருவது வரவேற்கத்தக்க வளமான வைபவமாகும். வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்வியல் கலைகள் - இம்மண்ணுக்கே உரித்தானவை. இச்சபையினரின் செயற்பாட்டில் கண்ணும் கருத்துமாக பேணப்பட்டு வருவதற்குரிய பிரச்சார முயற்சிகளுடன் மட்டுமன்றி பயன்பாட்டு செயற்பாடுகளாகவும் மாணவர்கள் மத்தியில் இனம்காணப்பட்டு வாழ்வியல் ஒழுக்கங்களாக அவர்களால் பின்பற்றப்படுவதற்குரிய படைப்புலத்தினையும் இச்சபையினரின் சேவைப்பரப்பு சமைத்துள்ளது என்பது இன்று கண்டனுபவிக்கும் யதார்த்த புலப்பாடு.

இத்தகைய மாண்புறு சேவைகளின் மத்தியில் முகிழ்ந்தெழும் இச்சபையின் சேவைநலத்தைப் பாராட்டும் பணியில் மலர் ஒன்று மொட்டுவிட்டு விரிவதும், அதன் இதழ்களின் ஒருபக்கத்தில் என் கருத்து இடம்பெறுவதும் எனக்கு மிக மகிழ்வைத் தருகின்றது. சொல்லும் செயலும் ஒரே சேர செம்மையாகப் பணியாற்றும் இவ்வமைப்பின் மக்கள் பணி மென்மேலும் பெரு விருட்சமாய் விருத்திபெற இறைவனைப் பிரார்த்தித்து மனங்கனிந்து வாழ்த்தி நிறைவு பெறுகிறேன்.


**சி.ஏ.மோகன்றாஸ்**
பிரதேச செயலர், பிரதேச செயலகம், சங்கானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



சச்சியா இரும்பக உரிமையாளர்

வழங்கிய

# வாழ்த்துச்செய்தி

சங்கானைக் கல்விக்கோட்டம் நடாத்தும் சைவத் திருமுறை விழாவானது தனது பத்தாவது ஆண்டில் கால்பதித்துள்ளமை குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். மனிதன் ஒவ்வொருவருக்கும் மிகவும் அத்தியாவசியமானதும் வாழ்வில் மிகப் பின்னிப் பிணைந்து நடைமுறைப்படுத்த வேண்டியிருப்பதாலும் திருமுறை விழா முக்கிய இடத்தை வகிக்கின்றது.

''சைவம் இன்றேல் தமிழில்லை
தமிழின்றேல் சைவம் இல்லை''

என்பது ஆன்றோர் வாக்கு. சைவநெறி நலிவுற்று காணப்படும் இவ்வேளையில் அதற்கு உயிருட்டியாக மறுமலர்ச்சியடைய வைப்பது பன்னிரு திருமுறைகளும் மற்றும் திருக்குறள், நன்னூல், மூதுரை போன்ற நூல்களுமேயாகும். அதற்கு அடுத்தபடியாக புராணபடனம், கோலம்போடல், தோரணம் பின்னுதல், மாலை தொடுத்தல் என்பனவும் எம்மை வழிநடத்திச் செல்கின்றன. எமது பண்பாடுகள், பழக்க வழக்கங்கள் உயிர்களிடத்தில் அன்பு காட்டல், பஞ்சமாபாதகத்திலிருந்து விடுபடுதல் போன்ற அனைத்தும் திருமுறை விழா நடாத்துவதன் மூலம் பாடசாலை மாணவர்களிடையே மட்டுமன்றி சமூகத்தினரிட மும் சென்றடைகிறது. நமது சமூகத்தை நன்னெறிப் படுத்தும் விழாவாக சைவத்திருமுறை விழாக்கள் அமைகின்றது.

''சைவத்தமிழ் அரசினால் அங்கீகாரம் கிடைக்கப் பெற்று எம்மண்ணில் பாடசாலைகள் தோறும் ஒரு பாடமாக கற்பிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. சமூகத்திற்கு நல்வழிகாட்ட வேண்டிய கல்விமான்கள், புத்திஜீவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்த சமகால கல்வியுலகில் ஒருசில கல்விக்கோட்டங்களில் மட்டும் சைவத்திருமுறை விழாக்கள் நடைபெறுகின்றன. சங்கானைக் கல்விக் கோட்டத்தைப் போல ஏனைய கல்விக் கோட்டங்களும் பின்பற்றி மாணவர்களின், சமுகத்தினரின் மத்தியில் சைவசமய எழுச்சியையும் ஆன்மீகச் சின்தனையையும் கலாசாரப் பண்புகளையும் வளர்க்க முயற்சிப்பது விரும்பத்தக்கது. சங்கானைக் கல்விக் கோட்டம் கடந்த பத்து வருடங்களாக சைவத்திருமுறை விழாவை சிறப்பாக நடாத்தி இன்று தசாப்த நிறைவு விழாவாக கொண்டாடப்படுவதையிட்டு சங்கானைக் கல்விக்கோட்டம் சார்ந்த அதிகாரி, அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் வாழ்த்தி அமைகின்றேன்.

சுபம்

தெல்லிப்பளை வீதி
வட்டுக்கோட்டை.

**சிவதர்மவள்ளல் சி.சச்சிதானந்தம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நோக்கில் சமய வாழ்வு பற்றிய சிந்தனை

மனித வாழ்வானது உயர்ந்த காத்திரமான அதேவேளை அரிதான ஒன்றாக விளங்குகின்றது. 'அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது' எனும் ஔவையின் வாக்கினை நோக்குங்கால் குறைவற்ற வகையில் மனித வாழ்வு பொதுவில் வந்தமைவது காணலாம். இவ்வாறு வந்தமையும் வாழ்வானது எவ்வாறு எதற்காக, எப்படி நெறிப்படுத்தப்படுகின்றது எனச் சிந்திக்கின்ற வேளை வாழ்க்கை பற்றிய காத்திரமான கருத்துக்களைக் காணக்கூடியதாகும். வாழ்வின் கோலங்கள் பல்வேறுபட்டன. பல்நோக்கம் கொண்டன. பல்வேறுபட்ட இலக்கை நாடுவனவாக அமைந்துள்ளன. ஆறறிவு எனும் பகுத்தறிவைச் சிறப்பாகக் கொண்டுள்ள தகைமையில் தத்தம் வாழ்வைப் பற்றி ஆய்ந்தறிந்து ஒழுங்குபடுத்தும் வல்லமை கொண்டவனாக விளங்குகின்றான். இத்தன்மையினாலேயே ஞானசம்பந்தரும் வாழ்வை நல்ல வகையில் நடாத்த முடியுமென்பதைச் சுட்டும் வகையில்,

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை"

எனச் சுட்டிச் சொல்லுதலைக் காணலாம். நெறிமுறைப்பட்டதான வாழ்வானது ஓர் ஒழுங்குக்குட்பட்ட ஒழுக்கமான சமய வாழ்வாக அமைவது குறிப்பிடத்தக்கதாகின்றது.

இந்திய சிந்தனை மரபில் சமயம், வாழ்வு எனும் இரு கருத்தமைவுகளும் ஒன்றிலிருந்து ஒன்று முற்றாகப் பிரிந்து நில்லாத வகைக்குரியதாய் விளங்குகின்றது. ஒவ்வொரு சமய நெறியும் வாழ்வினை உயர்ந்த நிலைக்கு இட்டுச்செல்ல வழிகாட்டி நின்கின்றது. இறைவனை முன்னிறுத்தி வைத்திருக்கும் வைதிக நெறிகளும் சரி, ஒழுக்கத்தினை முதன்மைப்படுத்தி நின்ற அவைதிக நெறிகளும் சரி, வாழ்வினை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்ல வழிகாட்டி நிற்கின்றன. இதனாற்தான் இந்திய தத்துவமானது வாழ்வாங்கு வாழ்கின்ற முறையாக, வாழ்க்கை நெறியாக அமைந்திருக்கின்றன எனப் பல அறிஞர்களால் வலியுறுத்தப்படுதலைக் காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தோராம் நூற்றாண்டில் அடியெடுத்துள்ள இக்காலகட்டத்தில் விஞ்ஞானம், தொழிநுட்பங்கள் சார்ந்த கண்டுபிடிப்புக்கள் வியக்கத்தகு முறையில் மனித வாழ்வின் பல்வேறு நடவடிக்கைகளுக்கும் விளக்கம் அளித்து புதிய பல கொள்கைகளை உருவாக்கி வரும் வேளையில் சமயம் முற்றாக அழிந்துவிடுமோ அன்றேல் ஒடுங்கிடுமோ எனும் ஆசங்கையை எடுத்து விளம்புவோர் பலரை நாம் காண்கின்றோம். மற்றும் பல்வேறு கோணங்களிலிருந்தும் சமயத்துக்கு எதிராகப் பல்வேறு நியாயங்களும் வாதங்களும் எடுத்தியம்பப்படுகின்றன. இவற்றையெல்லாம் தாக்குப் பிடித்து நிற்கும் சக்தி சமயத்துக்கு உண்டோ என்பதனைச் சிந்தனையில் நிறுத்தி இன்றைய சமூக வாழ்வியல் புலத்தில் நோக்க வேண்டியது அறிவியல் புலத்தில் வாழும் மாந்தர்களின் தலையாய கடமையாகின்றன. சமய நிகழ்வுகளையிட்டு வெளிவருகின்ற புனித மலர்களில் இச்சிந்தனைகளுக்கு இடமளித்து மக்களிடம் விழிப்புணர்வும் வேண்டிய செயலாக்கங்கள் தூண்டப்பட வேண்டியதும் இக்காலத்தின் தேவையாகின்றன.

சமயம் எனின் என்ன என்பதை யாவரும் பொதுவாக அறிந்திருக்கின்றனராயினும் சமயம் எனும் பொருளின் உண்மையான தாற்பரியத்தைப் பொதுமக்கள் யாவரும் சரிவர உணரவில்லை என்பதே உண்மையாகும்.

சிறுவயதில் சமயப் பதிகங்களையும் தேவாரங்களையும், கிரியைகளையும், புராணங்களையும் பற்றிக் கற்கும் போது பலர் இவைகளையே சமயம் எனக்கொண்டு விடுகின்றனர். வளர்ந்து பெரியோரான பின்னரும் கூட இந்நோக்கு இன்றைய சமூகத்தினரிடையே விரவியிருப்பதனைக் காணலாம். மேற்குறிப்பிட்டனவற்றில் விதிக்கப்பட்டவாறு கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்துவோமாயின் சமயத்தின் கடமைகளை ஆற்றிவிட்டோம் எனக் கருத முற்படுகின்றனர் பலர். ஆயினும் சமூக வாழ்வியற் கடமைகளை ஆற்றுபவன் ஒருவன் கோயில் வழிபாடுகளை மட்டிலும் விதிப்படி ஆற்றுகின்றமையினால் உண்மைச் சமயத்தைக் கடைப்பிடிப்பவனாகின்றான் என்று கூறிவிட முடியாது. காலையிலும் மாலையிலும் கடவுளைத் தொழுதுவிட்டு நாம் தாம் உண்மைச் சமயிகள் என்று கூறுவோர் பலர் எம்மிடையே உண்டு. ஆயினும் உண்மைச் சமயியாக விளங்குபவருக்கு இருக்க வேண்டிய தகுதி கடவுளை வழிபடுதல் அல்லது ஆலயத்திற்குக் கிரமம் தவறாது செல்லுதல் ஆகியனவற்றில் மட்டும் அடங்கிவிடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம் பற்றி விளக்க முற்பட்ட இந்திய தத்துவஞானி இராதாகிருஷ்ணன் 'மறை பொருள்கள் பற்றிய கல்வியையும், கிரியைகள் அல்லது சடங்குகள் பற்றிய உண்மைகளையும் அறிதல் மட்டும் சமயமாகிவிடாது.' எனச் சுட்டுதல் கூர்ந்து நோக்கத்தக்கதாகும். சமயம் என்பது ஒரு வாழ்க்கை வழி அல்லது வாழ்க்கை முறையாகும். சமூக வாழ்க்கையுடன் சமயம் தொடர்புறுகின்ற போதிலேயே அங்கு உண்மையைக் கண்டறிதலும் (தரிசனம்) உண்மையை உய்த்தறிதலும் (அனுபவம்) உள்ளடங்கும் பிரதான அம்சங்களாகின்றன. இங்குதான் சமயம் எனும் பதத்தின் தாற்பரியமும் தெளிவாகின்றது.

மூட நம்பிக்கைகள் சமூகத்தினின்று அருகி விஞ்ஞானம் வளர்ச்சியடைந்ததுடன் அனைத்து நிலை அறிவுகளும் விஞ்ஞானபூர்வமான சிந்தனைகளாகப் பரிணமித்துள்ள இக்காலச் சமூகங்களிலும் சமயங்கள் செழித்து வளர்வதற் குரிய காரணங்கள் அச்சமயங்கள் மனித சமூகத்திற்கு வழங்கும் பண்பாட்டினை மறைமுகமாகச் சுட்டி நிற்பதேயா கின்றன. கோடி செல்வம் கொண்டிருந்தாலும் கோபுரத்தில் வாழ்க்கையினை நடாத்தினாலும் நிரந்தரமற்ற இவ்வுலகப் பொருட்களினால் மனிதனைத் திருப்திப்படுத்த முடியாது போய்விடுகின்றது. இவ்வுலகப் பொருட்களினால் திருப்தியடை யாத ஒரு மனிதனின் நிரந்தர திருப்திக்கான விளைவு அல்லது துடிப்பினைச் சமயங்கள் சித்தரிக்கின்றன. 'எல்லையொன் றின்மை எனும் பொருளதனை' காட்டி நிற்கும் பண்பினதே சமயமாகும். இச்சமயம் மனநிறைவினையும் அமைதி பொங்கும் சாந்தியினையும் வாரி வழங்க வல்லதாகின்றது.

சமயம் என்றால் என்ன என விளக்கமளிக்கப் புகுந்த சுவாமி பவித்திரானந்தா, 'மனிதனுள் அடங்கியுள்ள ஈடேற்றத்தைப் பெற விரும்பும் ஓர் அவா அல்லது உந்துதலின் பிரதிபலிப்பே சமயம்' என எடுத்தாளுகின்றார். இவ்வுந்துதல் வழியே துன்பமயமான வாழ்வின் நிரந்தரமின்மையினின்றும் ஈடேற்றமான, கட்டுப்பாடற்ற, நிர்ணயமற்ற இவ்வுலகின் எப்பொருளும் அவனுக்கு நிரந்தரமான திருப்தியை அல்லது மகிழ்ச்சியை அளிக்க முடியவில்லை. ஆகவே அவன் நிரந்தரமான நிம்மதியை, நிரந்தரமான இன்பத்தை அமைதியைப் பெறுவதற்குரிய வழியை நாடுகின்றான். அது சுலபமான வழிமுறையாக இல்லையாயினும் அவனுக்கு அத்தகைய திருப்திகரமான இடம் உள்ளதென்பதும் தெளிவாகிவிட்டது. அதனையிட்டு ஆழ்ந்து சிந்திக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்குகிறான். இதனையே தத்துவவிசாரம் அல்லது தத்துவச் சிந்தனை என்று டாக்டர் இராதகிருஷ்ணன் விபரிக்கின்றார். இதன் வழி உண்மையில் நிரந்தரமான ஈடேற்றத்தைப் பெறுவதற்காக மனிதன் செய்யும் முயற்சிகளில் பிரதிபலிப்புத்தான் சமயம் என விளங்க வைக்கப்பட்டது. இங்கு மனித வாழ்வின் சீரிய நோக்கினை அடைந்திடத் துணை புரிவதாய்ச் சமயம் அமைய அச்சமயத்திற்கு உரமான அடித்தளமாகத் தத்துவம் அமைகின்றது. சுருக்கமாகக் கூறின் தத்துவம் வாழ்க்கையின் உண்மை நிலையினைத் தர்க்க முறைக்கு இயைந்த நிலையில் எடுத்து இயம்பச் சமயங்களோ வாழ்வில் வேண்டிநிற்கும் நோக்கினைப் பூர்த்திசெய்ய வல்ல நடைமுறை வழிகளைக் காட்டுவனவாக அமைகின்றன.

உயர்வான வாழ்க்கை அல்லது பூரணமான வாழ்க்கை என்பது ஒழுங்குக்குட்பட்ட அற வாழ்க்கையினைக் குறித்து நிற்கின்றது. சமூக வாழ்வில் ஒவ்வொரு மனிதனிடமிருந்தும் உண்மைச் சமயம் வேண்டுவது நல்லொழுக்கத்தையே தவிர வெறும் சம்பிரதாயங்கள், சடங்குகளை மட்டும் அல்ல. இதனையே உண்மைச் சமயம் வேண்டுவது; சடங்குகள் அல்ல. ஆனால் நல்நடத்தையே என இராதாகிருஷ்ணனும் வலியுறுத்தி நிற்பது காணலாம். நல்ல நடத்தையே உருவாக்குவதில் சடங்குகள் சம்பிரதாயங்கள் உதவுமாயின் மிகநன்று. ஆனால் நல் நடத்தையைக் கெடுக்கும் எந்தச் சடங்குகளையும் உண்மையான சமயம் ஆதரிக்கவில்லை என்கின்றார். அழுத்தமாக உண்மைச் சமயத்தில் சமயத்திற்குத் தீங்குகள் விளைவிக்கும் மூட நம்பிக்கைகளுக்குச் சிறிதேனும் இடமில்லை என்கின்றார். ஒரு குறிப்பிட்ட கடவுளை வணங்கினால் தான் மட்டும் ஈடேற்றம் பெறப்பட முடியும் என இந்துசமயம் என்றேனும் போதிக்கவில்லை. அவ்வாறு எந்த ஒரு சமயமேனும் போதிக்குமாயின் அது ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. சமயம் வேண்டுவது சிறப்புடைய கோட்பாடுகளல்ல. ஆனால் நல்வாழ்க்கை முறையேயாகும். இதனால்தான் ஒரு நடத்தையின் செம்மையை நிர்ணயிக்கும் விடயத்தில் அந்நடத்தைக்கான நோக்கு நன்மை பயப்பதாக அமைதல் வேண்டும் எனவும் அவ்வாறு நிர்ணயிக்கும் காரணிகளின் நோக்கு ஒன்றே நிச்சயமாக இருக்க வேண்டியதென்றும் ஜேர்மனியச் சிந்தனையாளர் இமானுவல் கான்ற் குறிப்பிடுகின்றார். மேற்குறிப்பிட்ட நோக்கு செம்மையாக அமைவதற்கு அவசியமாகின்ற தன்மையென்ன வெனில் அது நல்லதொரு மனப்பாங்கே என்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித மனதைப் புனிதமாக்க, நல்ல மனப்பாங்கை அமைத்துக் கொடுப்பதில் சமயமானது முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இறைவழிபாடு, தியானம் மற்றும் பல்வேறு சமயச் சம்பிரதாயங்களும் மேற்குறிப்பிட்ட தன்மையை மனிதனில் உருவாக்க முனைகின்றன. மனிதன் இவற்றின் உபயோகத்தை நன்கு பயன்படுத்தி முக்கிய நோக்கான தனது உளத்தூய்மையை வலுவடையச் செய்ய முயலுதல் வேண்டும். சமயங்களின் உட்கிடைதான் மண்ணில் நல்லவண்ணம் வாழ வழிகாட்டுகின்றது. இவ்வகையில் வழிகாட்டும் சமய வாழ்வானது ஊரறிய உலகறியப் பிறர் போற்றப் புகழ வாழும் வாழ்க்கையன்று. ஒவ்வொரு மனித உள்ளத்தின் புனிதப் பயணத்தின் முன்னேற்றமே சமயம் எனுமாற்போல் அமைகின்றது. 'அல்லல் போம்; வல்வினை போம்; அன்னை வயிற்றில் பிறந்த தொல்லை போம்; போகாத்துயரம் போம் என எடுத்தாளும் அனுபவங்களானது இறைவனைக் கைதொழுதக் கால் அமையும் எனும்போது வழிபாட்டு அம்சமானது எவ்வாறு துன்பங்களைப் போக்கி மனிதனை உயர்வடையச் செய்வதற்குரியதென்பது எடுத்தாளப்படுகின்றது. ஆன்ம ஈடேற்றத்துக்கு அவசியமான தெனக் கருதப்படுவதும் இவ்வாறான புனிதத்துவம் நோக்கிய செயலாக்கமே. எவ்வெவ் வழிகளின் மூலம் உங்கள் மனதைத் தூய்மையானதாக்க முடியுமோ அவ்வவ் வழிவகைகளை மேற்கொள்ளுங்கள் எனப் போதிக்கின்றது இந்துசமயம். இந்து சமயத்தைப் பின்பற்றுவோர் மட்டுமே ஈடேற்றத்தை அடைய முடியும் என அது எப்போதும் கூறவில்லை. நதிகள் பலவாயினும் அவை இறுதியில் சமுத்திரத்தில் சங்கமிப்பது போல் அல்லது விளக்குகள் பலவாயினும் ஒளி ஒன்றே என்பதுபோல் வழிகள் பலவாயினும் அடையும் இலக்கு ஒன்றே என்பதனை அடிநிலையாகக் கொண்டு இலக்கு ஒன்றென்பதற்கு அழுத்தம் கொடுத்திருப்பது காணலாம். இறைவன் ஒருவனேயாவான். முனிவர்களும் ஞானிகளும் அவனைப் பல்வேறு பெயர்களால் வழிபடுகின்றனர் என்பதும் இந்துசமயம் மூல நூல்கள் எடுத்துரைக்கும் செய்திகளாகும்.

சமயங்கள் உண்மையானவை எனக் கூறுகின்றீர்களே, ஆனால் ஒரு சமயம் காட்டும் கடவுள் அல்லது இறைவன் போல மற்றச் சமயக் கடவுள் இருப்பதில்லையே! இங்கு எது உண்மையெனக் கேட்போர்க்கு இராதாகிருஷ்ணன் தெளிவாகப் பதிலளிக்கின்றார். இவ்வாறான வேறுபாடுகள் காணப்படுவதற்கு உண்மைக் காரணம் நாம் கடவுளைப் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் உருவம் குறித்து ஏற்படுத்திக் கொண்ட வேறுபாடான அபிப்பிராயங்களே என்கின்றார். ஆயினும் கடவுளைப் பற்றிய உண்மைகளை நாம் சரிவர அறிய முடியவில்லை என்பதற்காகக் கடவுள் இல்லை என்பது பொருத்தமாகாது என்வது அவரின் கருத்தாகும். உண்மையில் கடவுளுக்கான எவ்வுருவ வழிபாடும் மனிதனால் உருவாக்கப்பட்டதேயாகும். கடவுளின் உருவை உணர்ந்துகொள்ளுதல், படம் பிடித்து அமைத்துக்கொள்ளுதல், மனிதனுக்கு இயலாத செயலாகும். இதனை ஆற்றுகையில் அவன் முறையான சரியான உருவத்தைக் கொண்டுவர முடியவில்லை. இதனாலேயே வேறுபாடுகள் தென்படுகின்றன. ஆயினும் உருவங்களில் வேறுபாடுகள் தென்படுவதால்தான் கடவுளை நோக்கி மனிதன் வழிபாடு செய்தல் பயனற்றுப் போய்விடுகின்றது என்பது பிழையான கருத்தாகும். எதனை வழிபட்டாலும் கடவுளெனக் கருதி வழிபாடு செய்யும் போது அதனைச் சேர்ந்து அடைந்து விடுகிறது என்பது உண்மை. மலைகளிலிருந்து உற்பத்தியா கும் ஊற்றுக்கள் இறுதியாக எவ்வாறு நதியை வந்தடை கின்றனவோ அதேபோன்று கடவுள் என்று நினைத்து ஆற்றப்படுகின்ற வழிபாடானது இறைவனை வந்தடைகின்றன என இந்துசமயம் போதிக்கின்றது.

சமயத்திற்கு வரைவிலக்கணப்படுத்த முற்பட்ட அறிஞரொருவர் பக்தியுடன் கூடிய ஒழுக்கமே சமயம் என்றமை குறிப்பிடத்தக்கதாகும். உண்மையான சமயி தன்னுள் அன்பு, சேவை ஆகியனவற்றை ஆழப்பதிக்க வேண்டும். இவையே உண்மைச் சமயத்தின் பிரதிபலிப்புகளாகும். சமய ஞானிகளின் வரலாற்றுண்மைகள் கற்றுத் தந்த பாடத்தினை மீட்போடாயின் தன்னை மறந்த காதல், தியாகம், தொண்டு ஆகியன கலந்திணைந்த பக்திநிலை தெளிவாகின்றது. இத்தன்மை யினை உருவாக்கி மனதை ஒருநிலைப்படுத்துவதற்கு முயல்வதே உண்மையாக வேண்டப்படுவதாகும். ஒரு நாளைக்குப் பல தடவைகள் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்வோரில் பலர் நெஞ்சில் அன்பு எனும் பண்பு சிறிதும் அற்றவராயும் குரூர நடவடிக்கைகளை ஆற்றுபவராகவும் இருக்கக் காண்கின்றோம். சமயத்தின் உண்மையான எதிரிகளாக, படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில் என்பது போல இருப்பவர்கள் இவர்களே. ஏனெனில் இவர்கள் சமயம் எனும் போர்வையின் கீழ் தமது சுயநல நோக்குகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைகின்றனர். இவர்கள் சமூகத்தில் பசுத்தோல் போர்த்திய புலிகளாக உலாவி வருகின்றனதென்பதும் கண்கூடு. இத்தகையோர் எத்தனை முறை கடவுளை வழிபடினும் இறையருளைப் பெறமாட்டார்கள் என்பது உண்மை. உண்மைச் சமயியானவன் தன்னுள் அன்பு, பண்பு, உண்மை, தியாக மனப்பான்மை, சுயநலமின்மை, சேவை ஆகிய நல்லொழுக்கங்களைக் கொண்டிருத்தல் அவசியமாகும். இவ்வொழுக்கங்களை உருவாக்குவதில் தெய்வ வழிபாடு உதவுகின்றதென்பதும் மனத்திடைக் கொள்ளத்தக்கதாகும்.

இன்றைய சமூக வாழ்வானது பல்வகையான இன்னல்களையும் பொருளாதார இடர்பாடுகளையும் கொண்டமைந்ததாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலையில் சமய வாழ்வானது சமூகம் எதிர்நோக்கும் இயல்புகளுக்கும் சவால்களுக்கும் முகம்கொடுக்க வேண்டிய சூழல் கொண்டதாக விளங்குகின்றது. அன்பு வாழ்வும் சேவை நிலையும் சமய அன்பர்களிடம் வளர்ந்து தன்னலம் கடந்த ஒரு சமூக வாழ்வுக்கு வழிகாட்ட வேண்டியதாகவுள்ளது. பணபலம் அரசியல் தாக்கங்களும் இணைந்த நிலையில் பிற மதங்களைச் சார்ந்தோர் இந்துமத நெறிகளில் வாழும் மாந்தர்களின் இன்னல்களை நீக்குவதான பாவனையில் தமக்குரிய செயற்திட்டங்களைச் செயற்படுத்த முற்படு வதனைக் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலை ஐரோப்பியர், குறிப்பாகப் போர்த்துக்கேயர் ஆகியோருடைய வருகையின் போது தொடங்கியதெனினும் இன்றும் கணிசமான தொகை யினர் இன்றைய சூழ்நிலையின் தன்மையைக் காரணமாகக் காட்டிப் பாதிப்புக்குள்ளாகி வருவது தெளிவிற்குரியது. இங்குதான் சைவ அபிமானிகள் நாவலர் காலத்தில் எழுந்த புத்தூக்கம் போல இக்காலத்தின் தேவைக்கேற்ற வகையில் விழிப்புணர்வும் செயலாக்கமும் கொள்ள வேண்டியது அவசியமாகும். இப்பணியில் ஒருசில மாந்தர்களே போற்றுதற்குரிய பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திச் செயற்படுவது காணலாம். தன்னலம் நோக்காது சமூக மாந்தர்களின் தேவைகளைப் பரந்த அளவில் மனங்கொண்டு செயற்படுவது காணலாம். அநாதைகள், விதவைகள், ஆதரவற்றவர்கள், வாய்ப்பற்றவர்கள், முதுமையுற்றவர்கள், கல்வி வசதி காண வாய்ப்பற்றவர்கள், அகதிகளாய் அல்லலுறுபவர்கள் எனப் பல ஏகமான மாந்தர்களினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதிடைக் கொண்டு நலிவுற்றவர்களை நன்னிலைப்படுத்து கின்ற நற்செயற்களை முன்னின்று செயற்படுத்துகின்றமை காண்கின்றோம். பிற மண்ணில் பொருள் கொண்டோரின் உதவியுடன் வைத்திய வசதிகள், நலன்புரி நிலையங்கள், கல்வி வளர்சாலைகள், வாழ்வகங்கள் போன்ற இன்னோரன்ன சேவைகளை ஆற்றுகின்ற நிலையிலேயே சமூகப் பணி சமயப் பணியாகவும் மலர்கின்றமையை ஓரளவிற்காவது காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான அரும் பணியாக்கங்களை ஓரிரு நிறுவனங்களோ அல்லது ஓரிரு தனிமனிதர்களோ மாத்திரமின்றி சமய அன்பர்களின் வேட்கையாகிப் பல்கிப் பெருகுகின்ற நிலையிலேயே சமய அறமென்பது சமய அனுபூதிமான்கள் கண்ட வகையில் விரிந்து செல்லவல்லதாகின்றது. 'தாளாது அறம் செய்மின்' என அப்பர் எடுத்தாண்ட வரிக்கும் 'அன்பர் பணி செய்ய' தம்மையும் இனங்கண்ட நாயன்மார்களின் திருவுளத்தினை இங்கு உணர்ந்துகொள்ளல் சாத்தியமாகின்றது.

சமய நிறுவனங்களும், வளர்ந்து நிலைத்த வசதிகள் கொண்ட ஆலயங்களின் சபைகளும் நாட்டின், சமூகத்தின் நலம்நாடி நல்ல பல திட்டங்களைச் செயற்படுத்த வேண்டிய பணியை முன்னெடுக்க வேண்டுவது சமய வாழ்வுக்கு ஆரோக்கியமானதாகும். இப்பணிகள் நன்மக்களாக இம்மாந்தர்கள் வாழ்வதற்குரிய நிலைக்களங்களாக அமையும் என்பது அடிப்படையாகும். அன்பும், அறனும், அருளும் ஓங்கி நற்சமயத்தவர்களாக விளங்குவதற்குச் சமய உண்மைகளை உணரவும் சமயம் போதிக்கும் நல் வாழ்வினைக் கடைப்பிடிக்கவும் வழிகாட்டுவனவாக அமைதல் வேண்டும். இந்து சமயமானது உலகளாவிய மனிதப் பண்பினை உயிர்ப்பாகக் கொண்டதென விளக்கிய வீரபுருஷர் விவேகானந்தரின் கூற்றுத்தான் இன்றைய சமூகங்களில் எவ்வளவு பேரால் விளங்கிக் கொள்ளப்படுகின்றன என்பது கேள்விக்குரியதே. 'அன்பே கடவுள்' எனவும் 'உண்மையே கடவுள் எனவும் திரும்பத் திரும்ப இடித்துரைத்த மகாத்மா காந்தியின் கூற்றுக்கு அசவியமென்ன என்பதனை ஆழ்ந்து நோக்கினால் இன்றைய சமூகங்கள் சிலவற்றினிடையே குறிக்கோள் எதுவும் இன்றி வாழ்கின்ற போக்கினை இனங்காணக் கூடியதாகவுள்ளமை தெளிவாகும். வாழ்வின் இறுதிநிலையிலும் தனக்குப் பொல்லாங்கு செய்வதன் மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு கொண்டவராக வாழ்ந்து மறைந்த மகான் மகாத்மாகாந்தி ஆவர். இத்தகைய அன்பு மனப்பான்மையை அடையப்பெறுவது கடினமானதென்பது உண்மை. எனினும் அசாத்தியமானதல்ல. நாம் அன்பு நிறைந்தவர்களாக, அயலானை நேசிப்பவனாக அல்லது உறுபவனைக் கண்டு ஆதரவளிப்பவனாக வாழ வேண்டுமென எண்ணும் சித்தம் கொண்டவர்களாக வாழ முற்பட வேண்டும். ‘அறம் செய்ய விரும்பு’ என மூதாட்டி எவ்வளவு அற்புதமாக எடுத்தாண்டார். அறஞ்செய்ய முடியாவிடினும் நீ அறஞ்செய்வதனை விரும்பும் பண்பினைச் செய்யலாம் என்பதனை எவ்வளவு நுட்பமாக விளக்கி நின்றார். இவ்வகையில் உடனடியாக இச்சேவை மனப்பான்மையை எடுத்தாள முடியாவிடினும் இதற்குரிய முயற்சியில் ஈடுட்டுச் சமயம் சார்ந்த நெறியில் சமூகத்தின் சிறப்பினைக் காண முனைதல் வேண்டியதாகும்.

இன்றைய சமூகங்களில் சமயமானது பரந்த நோக்குடையதாக விளங்க வேண்டும். தெய்வம் பல சொல்லிப் பகைமை, குரோதங்களை வளர்ப்பது அறிவுடைமையாது. யாவரையும் அன்புடன் மதித்து நடாத்தும் பண்பைப் பகவத்கீதை போதிக்கின்றது. ‘லோக சங்கிரகம்’ எனும் உலக ஒற்றுமைக்காக உழைப்பதற்கு முதற்கண் தேவையானது அன்புடன் கூடிய உளச்சிந்தையாகும். ஆகவே உண்மைச் சமயிகள் எவ்வாறு கோயில் வழிபாடு, சடங்குகள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றில் ஈடுபடுகின்றனரோ அவ்வாறே தம்முள் அன்பு, சுயநலமின்மை எனும் நற்பண்புகளை வளர்க்க முயல வேண்டும். இவ்வாறான நற்பண்புகளைக் கொண்டிலங்குவதே உண்மைச் சமயமாகும். விஞ்ஞான வளர்ச்சி கண்ட இவ்வுலகிலிருந்து உண்மைச் சமயம் இல்லாதொழிய வேண்டுமாயின் மனித சமூகத்தில் ஏலவே குறிப்பிட்ட பண்புகளுக்கு இடமில்லாது போன பின்பே அது சாத்தியமாகும். இந்நற்பண்புகளைச் சமயத்தின் சாரம் எனக் குறிப்பிட்டால் அது மிகையாகாது. ஏலவே கண்ட நற்பண்புகள் இன்றைய சமூகத்தில் இளையோடி நிற்கும் வரை நிலைத்து நிற்கும் என்பதில் சிறிதேனும் சந்தேகமில்லை.

**பேராசிரியர் நா. ஞானகுமாரன்,**
தலைவர்,
சட்டத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானைக் கல்வ
# கடந்த வருடங்களில் நடைபெற்ற கை

| விழா நடைபெற்ற பாடசாலை | காலம் | அதிபர் |
|---|---|---|
| யா/வட்டு திருஞானசம்பந்த வித்தியாலயம் (ஆரம்பப் பிரிவு, வட்டுக்கோட்டை) | 23.11.1996 | திரு.வி.சிவஞானபோதன் |
| யா/வட்டு திருஞானசம்பந்த வித்தியாலயம் (ஆரம்பப் பிரிவு, வட்டுக்கோட்டை) | 25.10.1997 | திரு.வி.சிவஞானபோதன் |
| யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம் | 16.10.1998 | திரு.கா.சந்திரபாலன் |
| யா/சிவப்பிரகாச மகா வித்தியாலயம், சங்கானை. | 30.10.1999 | திரு.ச.கைலாசநாதன் |
| யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் | 03.12.2000 | திருமதி.கோ.அம்பலவாண |
| யா/வட்டு இந்துக் கல்லூரி, சித்தன்கேணி. | 28.10.2001 | திரு.ச.இராமலிங்கம் |
| யா/பண்ணாகம் வடக்கு அ.மி.த.க.பாடசாலை காலையடி, பண்டத்தரிப்பு. | 05.10.2002 | திரு.க.இரத்தினேஸ்வரன் |
| யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் சுழிபுரம். | 19.10.2003 | திருமதி.ர.சோதிலிங்கம் |
| யா/வட்டு மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு பாடசாலை. | 30.10.2004 | திரு.ந.சபாரத்தினசிங்கி |
| யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம். | 29.10.2005 | திரு.வி.நடராசா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக்கோட்டத்தில்
# 3 சைவத்திருமுறை விழா பற்றிய விபரம்

| | விழா தலைவர் | விழாவின் நிகழ்வு ஆரம்பிக்கப்பெற்ற ஆலயங்கள் |
|---|---|---|
| னபோதன் | தலைவர் : திரு.ப.விக்கினேஸ்வரன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் சங்கானைக் கல்விக்கோட்டம்)<br>உப தலைவர் : திரு.அ.தற்பரானந்தன் (உதவிக் கல்விப் பணிப்பாளர்) சங்கானைக் கல்விக்கோட்டம்) | சங்கரத்தை பத்திரகாளி அம்மன் ஆலயம் |
| னபோதன் | திரு.ஆ.வ.கணேசலிங்கம் (உதவிக்கல்விப் பணிப்பாளர் சங்கானைக் கல்விக் கோட்டம்) | சங்கரத்தை பத்திரகாளி அம்மன் ஆலயம் |
| பாலன் | திரு.ஆ.வ.கணேசலிங்கம் (உதவிக்கல்விப் பணிப்பாளர் சங்கானைக் கல்விக் கோட்டம்) | தொல்புரம் வழக்கம்பரை அம்மன் ஆலயம் |
| சநாதன் | திரு.சி.செல்லையா (உதவிக்கல்விப் பணிப்பாளர் சங்கானைக் கல்விக் கோட்டம்) | அரசடி ஞானவைரவர் பெருமான் ஆலயம் |
| அம்பலவாணர் | திரு.சி.செல்லையா (உதவிக்கல்விப் பணிப்பாளர் சங்கானைக் கல்விக் கோட்டம்) | அராலி வண்ணபுரம் சிவன் கோவில். |
| லிங்கம் | திரு.சி.செல்லையா (கோட்டக்கல்விப் பணிப்பாளர் சங்கானைக் கல்விக் கோட்டம்) | சித்தன்கேணி பெரியவளவு மகா கணபதி பிள்ளையார் கோவில். |
| னேஸ்வரன் | திரு.சி.செல்லையா (கோட்டக்கல்விப் பணிப்பாளர் சங்கானைக் கல்விக் கோட்டம்) | பணிப்புலம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் |
| திலிங்கம் | திரு.சி.செல்லையா (கோட்டக்கல்விப் பணிப்பாளர் சங்கானைக் கல்விக் கோட்டம்) | மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தானம் |
| தினசிங்கி | திரு.நா.சண்முகசுந்தரம் (கோட்டக்கல்விப் பணிப்பாளர் சங்கானைக் கல்விக் கோட்டம்) | சங்கரத்தை பத்திரகாளி அம்மன் ஆலயம் |
| ா | திரு.நா.சண்முகசுந்தரம் (கோட்டக்கல்விப் பணிப்பாளர் சங்கானைக் கல்விக் கோட்டம்) | பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி தேவஸ்தானம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலைக் கல்வியும் சைவ வாழ்வியலும்

"கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் ஆவான்". கல்வி என்பது வாழ்க்கை. வாழ்க்கை என்பது சீவனோபாயம் அன்று மகிழ்ச்சிகரமான நிறை வாழ்வே வாழ்க்கை. கல்வி என்பது அத்தகைய நிறை வாழ்வைத் தருவது. மனித வாழ்வின் அடிப்படைத் தேவை உணவு, உடை, உறையுள் இவை மூன்றும் மட்டுமல்ல. உணர்வுள்ள சமயப் பழக்கவழக்கங்களே உள ஆரோக்கியமான வாழ்வைத் தருவன. விஞ்ஞான தொழில்நுட்பத்தின் அதிவேக வளர்ச்சி மனிதனை இயந்திர மயமாக ஆக்கிவிட்டது. உளவளம் குன்றிய, மனிதநேயம் அற்ற ஒரு சமூக விழுமியங்களை உள்ளடக்கிய விழுமியக் கல்வி பற்றி இன்று உலகக் கல்வியியலாளர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஒரு காலத்தில் பாடசாலைகள் வித்தியாலயங்கள் என்று உயர்வாகக் கொள்ளுமளவிற்கு உயர் விழுமியங்களின் நிலைக்களமாக விளங்கின. உணர்வுபூர்வமான சமயப் பழக்கவழங்கங்கள், சமய வாழ்வியலை வலியுறுத்தும் கல்விப் பயிற்சிகள் நிறைந்திருந்தன. மாணவர்கள் மகிழ்ச்சியுடன் பாடசாலைக் கல்வியில் பங்காளர்களாகச் செயற்பட்டனர்.

ஒழுங்கான காலைப் பிரார்த்தனை பாடசாலை ஆரம்பிக்கும் போதும் மூடப்படும் போதும் தேவாரப் பண் இசைத்தல், குரு பூசைகள், சமய விழாக்கள், பெரியார்களின் நினைவு தினங்கள், வாரத்தில் ஒருநாள் ஆலயங்களுக்குச் செல்லுதல் என ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடுகளின் களமாகப் பாடசாலைகள் விளங்கின. சைவச் சிறார்கள் 'நீறில்லா நெற்றிபாழ்' என்ற சொல்லுக்கு அடையாளமாக நீறு பூசிய மாணவர் குழாமாக காட்சி தந்தனர். அதனால் நீறணிந்தார் வினை போக்கும் நிமலர்களாக பாடசாலை மாணவர்கள் உயர்ந்திருந்தனர்.

**"நெஞ்சத்து நல்லம் யாம் எனும் நடுவு நிலைமையால்**
**கல்வியழகே அழகு"** என்று உணர்ந்து கற்றனர்.

**"நெஞ்சம் உனக்கே இடமாக வைத்தேன்**
**நினையாது ஒருபோதும் இருந்தறியேன்"**
என்று நினைந்து கற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"சலம்பூவொடு தூப மறந்தறியேன்**
**தமிழோடிசை பாடல் மறந்தறியேன்"**

என்ற உணர்வுபூர்வமான செயற்பாடுகள் பாடசாலைகளில் நிரம்பி வழிந்தது. இதனால் பாடசாலைகளில் ஒழுக்க மேம்பாடு உயர்ந்திருந்தது. ஆசிரியர்கள் அறிவை அன்பில் குழைத்து ஊட்டினர். ஆசிரியர்களது தோற்றம், நடத்தை, முன்னுதாரணங்களால் மிகுந்திருந்தன. இதனால் 'குருவே துணை' என்ற எண்ணம் ஒவ்வொரு பாடசாலை மாணவனது இதயத்திலும் ஆழப்பதிந்திருந்தது. மனித வாழ்வை வளம்படுத்தும் வாழ்வியலின் சிறப்பான அம்சங்களின் மாணவர்களுக்கு தினந்தோறும் கையளிக்கப்பட்டன. இத்தகைய புனிதமான செயற்பாடுகளையுடையது தான் பாடசாலை என்ற ஒரு நிலை எமது நாட்டில் நிலை பெற்றிருந்தது.

நமது நாட்டில் பாடசாலைகள் வளர்ந்த வரலாற்றுப் பாதையை நோக்கினால் கிறிஸ்தவ மதம் பரப்பும் நோக்கிலேயே ஆரம்ப காலங்களில் பெருந்தொகையான பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. இப்பாடசாலைகள் இந்து, பௌத்த, இஸ்லாமிய மக்களின் வாழ்வியலம்சங்களை வேருடன் பிடுங்கி அதன் சுவடுகளை இல்லாதொழிப்பதில் ஆர்வமுடன் செயற்பட்டன. இதனைத் தடுத்து நிறுத்தும் நோக்கிலேயே சுதேச மதங்கள் பாடசாலைகளை நிறுவின. இப்பாடசாலைகள் சமய வாழ்வை அர்த்தமுள்ளதாக மாணவருலகம் புரிந்து வாழத்தக்க நிறைந்த செயற்பாடுகளை பாடசாலைக் கல்வியில் விரிவுறப் பரப்பியிருந்தன. ''மண்ணில் நல்ல வண்ணம் வாழும்'' வழிமுறைகளையே சைவப் பாடசாலைகள் கல்விச் செயற்பாடாகக் கொண்டிருந்தன. எனினும் சீவனோபாயக் கல்வி என்ற வயிற்றுப் பிழைப்புக்கான ஆடம்பர வாழ்வைத் தரும் உலகியல் கல்வியின் ஈர்ப்பால் கிறிஸ்தவ பாடசாலைகள் சுதேச சமய வாழ்வியலை இருளில் மூழ்க வைப்பதில் வெற்றிகண்டன.

இலங்கை விடுதலை அடைந்த பின்பு கிறிஸ்தவ பாடசாலைகளின் தீய விளைவுகளை நன்குணர்ந்த அரசு பாடசாலைகளைத் தேசிய மயமாக்க முன்வந்தது சுதேச சமய பண்பாட்டம்சங்களை மக்களுக்கு வழங்கும் நிலையங்களாகப் பாடசாலைகளை அமைக்கும் நோக்கிலேயே இம்முயற்சி முன்னெடுக்கப்பட்டது. கிறிஸ்தவப் பாடசாலைகளில் படித்து, ஆசிரியராகப் பணிபுரிந்த ஆறுமுகநாவலர் தனது அனுபவத்தால் பெற்ற விழிப்புணர்வே சைவப் பாடசாலைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றமாகும். அவர் வழிநின்று சைவ வித்தியா விருத்திச் சங்கம், இந்து மகாசபை என்பன சைவப் பள்ளிகளை நிறுவி சைவ வாழ்வியலம்சங்களை மிக வெற்றிகரமாக மாணவர்களுக்கு வழங்கினர்.

பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டதன் விளைவாக பௌத்த, இஸ்லாமிய சமூகத்தவர்களிடையே பெருவிழிப் புணர்வு ஏற்பட்டது. தத்தமது சமயப் பழக்கவழக்கங்கள், வழிபாட்டம்சங்கள், உணவு, உடைப் பழக்க வழக்கங்கள் முழுமையாக வழங்கும் சமய வாழ்வியலை மையமாகக் கொண்ட நிறுவனங்களால் பாடசாலைகள் வளர்ந்தோங்கின. ஆனால் சைவப் பாடசாலைகள் இந்நிலையில் பெரும் பின்னடைவையே எதிர்கொண்டன.

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ பாடசாலைகளே வலுவான கல்வி நிறுவனங்கள் என்ற மாயை இன்றுந்தான் அகலவில்லையே! ஒழுக்கம் என்ற சொல்லின் தாற்பரியத்தை சரியாக விளங்கிக் கொள்ளாமல், கிறிஸ்தவ பாடசாலைகள் தான் (Well disciplinary School) என்ற எண்ணம் இன்றும் எம்மவரிடையே மறையாததின் மர்மங்கள்தான் யாரறிவார்? கல்வி சீவனோபாயம் என்று கருதும் நிலை மேலும் ஓங்கிவரும் தீய நிலையை யாரும் அறியாதுள்ளனரே!

சைவசமய முகாமையிலிருந்து விடுபட்டு அரச பாடசாலைகளானதும் சைவப் பாடசாலைகளின் கட்டுக்கோப்பு குலைந்தது. பண்பாடு, விழுமியச் செயற்பாடுகள் மெல்ல மெல்ல விலகின. பௌத்த இஸ்லாமிய பாடசாலைகளின் செயற்பாடு சுய உணர்வுடன், பண்பாடு மிடுக்கோடு, சுயாதீன செயற்பாடுகளால் பொலிந்திருந்தன. அதேவேளை தேசிய மயத்தின் பின்பு கிறிஸ்தவ பாடசாலைகள் தமது கட்டுக்கோப்பையும் சமய செயற்பாடுகளில் மிக இறுக்கப் போக்கையும் சிறிதும் தளர்த்தவில்லை.

ஆனால் பரந்த மனப்பாங்கு என்ற சிந்தனையுடன் சைவர்கள், அரச பாடசாலை என்ற உணர்வுடன் மனித நேயத்துடன் சர்வமத சம்மதச் செயற்பாடுகளைக் கடைப்பிடித்தனர். ஆனால் சைவவழிபாட்டு முறைகள், சமய விழாக்கள், சமய விழுமியச் செயற்பாடுகள் கைவிடப்பட்டன. இவற்றிற்கான காரணங்கள் ஆய்வுசெய்யப்பட வேண்டியன.

சைவ வாழ்வுடன் நெருங்கி உறவாட ஒரு ஆசிரிய தலைமுறை பாடசாலைக்குள் நுழைந்து கொண்டது. கலைத்திட்ட மாற்றத்தில் சமய பாடத்திற்கு வாரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபாடவேளை ஒதுக்கப்பட்டது. அதுவும் நேர அட்டவணையில் கடைசிப் பாடவேளையானது இறுதியில் மாதத்தில் இரு பாடவேளையே சாத்தியமானது. இன்றைய பாடசாலை வேலைத்திட்டத்தில் நெருக்கடியான வேலைப் பளுவும், இணைப் பாடவிதானச் செயற்பாடுகளின் பெருக்கமும் பாடசாலை சூழலை சமய வாழ்வியலிலிருந்து முற்றாக அந்நியப்படுத்திக் கொண்டிருக்கிறதை விழிப்புடன் நோக்க வேண்டும்.

**"காலையெழுந்து கைகால் முகங்கழுவி**
**கோலமலரெடுத்துக் குருபதத்தைக் கும்பிடடி"**

என்ற யோகர் சுவாமியின் வாக்கை மறந்த வீடுகளாக எங்களது வீடுகள் மாறியுள்ளன. பாடசாலைகளில் உடற்பயிற்சி என்ற "Keep it" ஐ கல்வித் திணைக்களத்தை திருப்திப்படுத்த செய்ய விரைந்து கடுகதியில் தேவாரம் பாடும் பாடசாலைச் சூழல் மாணவரது நெஞ்சத்தை தொட முடியுமா? குருபூசைகள் இல்லை. பெரியாரின் விழாக்கள் இல்லை. வேண்டுதல், வேண்டாமை இலாது என்ன என்னவோ காலைப் பிரார்த்தனை வேளைகளில் நிறைகிறது. இந்நிலையில் மகிழ்ச்சிகரமான பிள்ளை நேயப் பாடசாலைகள் பற்றியும் முன்னெடுப்புக்கள் நடைபெறுகின்றன.

கல்வி என்பது ஒரு நல்ல வாழ்வியலை நோக்கி மாணவர்களை அழைத்துச் செல்ல வேண்டும். கல்வி நோக்கங்களில் பண்பாட்டம்சமே தலையாயது.

"Education without culture is no value"
''பண்பாட்டில்லாத கல்வி பெறுமானமற்றது''

என்பது கவியரசர் இரவீந்திரநாத்கூர் கூற்று.

மனிதப் பண்பாடு என்பது வாழ்க்கை முறையின் உயர் அம்சங்களே. மனிதனை விலங்குத் தன்மையிலிருந்து மீட்பதே கல்விப் பணியும் சமயப் பணியுமாகும். ஆகவே கல்விக் கூடங்கள் சமயப் பணியால் வளம்பெற வேண்டும். சமயம் பாடமாகக் கற்பிப்பதற்குரியதல்ல. சமயம் வாழ்வியலாக வழங்கப்பட வேண்டும். சமய நம்பிக்கைகள் ஆழ வேரூன்றத்தக்க பழக்கவழக்கங்களை வழங்கும் பணி பாடசாலைக்குரியது.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற குணநலனே கல்வியின் வெளிப்பாடாக, வாழ்வியலை மலரச் செய்யத்தக்க சுமூகமான குடும்ப வாழ்வு (Socialised family life) கல்வியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவாக அமையப் பாடசாலைச் செயற்பாடு வடிவமைக்கப்பட வேண்டும். இதுதான் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற சமய விழுமியம். குரு என்பது மாதா, பிதா, ஆசிரியர், மூத்தோர், அரசன் என்ற ஐந்து தரத்தினரைக் குரு எனக் கொள்ளுதல் சமய விழுமியமாகும். குருபூசை என்ற செயற்பாடு கல்விச் செயற்பாடாக உருமாற்றம் செய்யத் தகுந்த இடம் பாடசாலைகளே.

கல்வி இரக்கமுள்ள மனிதத் தலைமுறையை உருவாக்க வேண்டும்.

**"கோபம் பொறாமை தள்ளு**
**கொலை களவை எள்ளு"**

என்ற யோகர் சுவாமியின் கருத்து கல்வி விழுமியமாக மாற்றப்பட வேண்டும்.

'அன்பே சிவம்' என்பது திருமந்திரம் எனில் அன்பு என்ற விழுமியத்தைப் பாடசாலை வழங்குவது கல்விப்பணிதானே. சீவகாருண்யம் என்பது உயிர்க்கொலையைத் தவிர்ப்பது, வறியார்க்கு ஈவது, பிறரிடத்து அன்பு காட்டுவது இதற்கான செயற்றிட்டங்களை பாடசாலைக் கல்வியில் வடிவமைத்து வழங்க வேண்டும். இறவாத இன்ப அன்பு, மரணமில்லாப் பெருவாழ்வு, தியாகம், கூடி வாழ்தல் இத்தகைய வாழ்வியல் நடைமுறைகளை ஆழமாகக் கொண்ட சைவசமய வாழ்வியலை எமது பாடசாலைகளில் வழங்கி நிறைவாழ்வை ஏற்படுத்தும் பணிகளை பாடசாலைக்கு உரியதாக்க கல்வியுலகம் திட்டமிட்டு செயற்பட வேண்டும்.

திருமுறையும் கல்வியும் :

தேவாரம் வேதசாரம்; ஞானப்பனுவல்; வாழ்க்கைநெறி, தேவாரம் ஓதுவதற்கு மட்டும் உரியதல்ல. ஓதியுணர்ந்து வாழ்வதற்கான வழிமுறைகள் அனைத்தும் கொண்டது. திருமுறை விழாக்கள், நாயன்மார் குருபூசைகள், முறைப்படியாக வாழ்க்கை அம்சங்களை உய்த்துணர்ந்து பின்பற்றத் தூண்டுவன. கல்விப் பொறுப்பை ஏற்றுள்ள பணிப்பாளர்கள், பணியாளர்களும் மாணவர்களை நெறிமுறையான வாழ்க்கைப் பாதையில் அழைத்துச் செல்பவர்கள் தாங்கள் என்பதை நிறைவிலிருத்திச் செயற்பட வேண்டும்.

இவ்வகையில் சங்கானைக் கல்விக்கோட்ட திருமுறை விழா சைவ வாழ்வியலை நன்குணர்ந்து வாழும் முன்னைய சங்கானைக் கோட்டக் கல்வி அதிகாரியும் தற்போதய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய திரு.ப.விக்னேஸ்வரன் அவர்களால் மேற்கூறப்பட்ட நோக்கங்களை உயிர்ப்பாக முன்வைத்து நல்லெண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இதன் பயனாக மாணவர்கள் தங்கள் வாழ்வை சமயத்துடன் இணைத்துக்கொண்டனர். சமய விழாக்களுக்கான மாலை, தோரணம், கோலங்கள், தேவாரப் பண், சுயமாக அவர்களது பாடசாலை வாழ்விலும் சமூக வாழ்விலும் அவர்களால் நிறைவு செய்யப்படுகிறது. அதாவது வாழ்வியலே சமயமாக மாறியுள்ளது.

வாழ்வில் முழுமையாகக் காலூன்றச் செய்வதே கல்வியாளர் கடமை. இறைபணியும், கல்விப் பணியும் பேதாபேதங்களைக் கடந்த புனிதப் பணி. மனித நேயத்தை மலரச் செய்யும் நற்பணி. அவ்வகையில் ஒவ்வொரு சமயிகளும் கல்விப்பணியில் நுழைந்தவேளை மாணவர்களது வாழ்வியலை மேம்படுத்தி மேன்மை கொள் சைவநீதி விளங்கப் பணிபுரிய வேண்டும்.

சிவம் என்பது அன்பு கிறிஸ்து என்பதும் அன்பு. கல்வி என்பது அறிவு. அறிவின் வெளிப்பாடு அன்பு. அன்புடையார் எல்லாம் உடையார். அவர் சுதந்திரமும் உடையவர். எல்லாம் சிவன் செயல் என்று தன் பணியை நிறைபணியாக ஆற்றுவதே சிவத்தொண்டு. அப்பணியே ஆசிரியம்; திருமுறை; சைவ நீதி; வாழ்வு.

வாழ்வியலைப் புரிந்துகொண்டால் வாழ்வாவது மாயம் அல்ல. மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தால், எதுவும் மண்ணாகாது. மரணமிலாப் பெருவாழ்வு பெறுவது திண்ணம்.

**திரு.குமாரசாமி சண்முகநாதன்,**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
மாணவ அபிவிருத்தி,
வலிகாமம் வலயம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவ உணவுக் கோட்பாடும் சமநிலைச் சைவ உணவும்



சைவ உணவுக் கோட்பாடு என்பது உணவை மட்டும் பற்றிய ஒரு விடயமல்ல. அது ஒரு வாழ்க்கை முறை, நல்வாழ்வு வாழ்வதற்கு முதற்படி.

நாம் உயிர்வாழ உணவு முக்கியம். அதே சமயம் எந்த வகை உணவும் எம்மை எக்காலமும் - சிரஞ்சீவியாக வாழ உதவப் போவதில்லை என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

உடம்பினுள் என்றும் அழிவற்ற ஆன்மா குடிகொண்டுள்ளது. ஆன்ம வளர்ச்சியானது நாம் எவ்வாறு வாழ்த்துகின்றோம். சிந்திக்கிறோம், செயற்படுகிறோம், பேசுகிறோம் என்பதிலேயே தங்கியுள்ளது. ஆன்ம வளர்ச்சி நாம் எதை உட்கொள்கின்றோம் என்பதில் நேரடியாகத் தங்கியிருக்கவில்லை.

ஆனால் எமது வாழ்க்கை, சிந்தனை, செயற்பாடு, பேச்சு என்பனவற்றில் எமது உணவுமுறை செல்வாக்குச் செலுத்துகிறது. ஆகவே ஆன்ம வளர்ச்சி மறைமுகமாக எமது உணவுமுறையில் தங்கியுள்ளது. ''உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்'' என்கிறார் திருமூலர்.

ஆகவே எமது உணவு உடம்பை வளர்ப்பதோடு அல்லாமல் உள்ளத்தை உயிரை ஆன்மாவை வளர்த்துக்கொள்ள உதவுவதாக அமைதல் வேண்டும். உணவைப் பற்றி இந்து சமயத்தில் பல நியமங்கள் சொல்லப்பட்டிருப்பதற்கு இதுவொரு முக்கிய காரணம். இந்நியமங்களின் தாற்பரியம் சாத்வீக (சத்வ) குணத்தை விருத்திசெய்தல் ஆகும்.

சாத்வீக குணத்தை அபிவிருத்தி செய்யும் உணவு சத்வ உணவு - சுத்த உணவு - சைவ உணவு. அந்த உணவைத் தயாரிக்கிறவர்கள், பரிமாறுகிறவர்கள் கூட சத்வ குணமுடையவர்களாக இருத்தல் வேண்டும் என்பது நியமம்.

சத்வ குணத்தைதத் தரவல்லது என்பதுடன் அகிம்சை மார்க்கமே மனித குலத்திற்கு உகந்த சரியான பாதை என்பதாலும் சைவ உணவுக் கோட்பாட்டை இந்திய (இந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமண, பௌத்த) சமயங்கள் வலியுறுத்துகின்றன. எந்தவொரு உயிர் வாழ்வனவற்றிற்கும் தீமை செய்யாமை என்பதுவே அகிம்சையின் பொருள்.

யூத, கிறிஸ்தவ மதக் கோட்பாடுகளும் "நீவிர் கொள்ளுதல் ஆகாது" (Thou shall not kill) எனவே கட்டளையிடுகின்றன. பல ஆரம்பகால கிறிஸ்தவ ஞானிகள் சைவ உணவுக் கோட்பாட்டாளர்களாகவே இருந்தனர். ஆனால் தனி நபர்கள் இக்கட்டளையின் பொருளை தத்தமது வசதிக்கும் விளக்கத்துக்கும் அமைய வியாக்கியானம் செய்து கொண்டுள்ளனர்.

அகிம்சையின் உயர்வையும் ஒழுங்கான நல்வாழ்வுக்கு முதற்படி புலான் மாறுதல் என்பதையும் உணர்ந்து தெளிந்த உலகப் பெரும் சிந்தனையாளர்களான பைதகரஸ், ஒளிட், செனக்கா, ஷெலி, வோல்ற்ரயர், சேர்.ஐசாக் நியூட்டன், ஜோர்ஜ் பேர்னாட்ஷோ, ஜெனரல் பிறாம்வெல், பூத், லியோ டால்ஸ்டாய் உணவாளர்களாக மாறினர்.

திருக்குறளை "உலகப் பொதுமறை" எனப் போற்றிப் பெருமைகொள்ள எந்தவொரு தமிழனும் நாத்திகர் உட்பட பின்னிற்பதில்லை. அப்பொதுமறையிலே சைவ உணவுக் கோட்பாடு "கொல்லாமை" 'புலான் மறுத்தல்' எனும் இரு அதிகாரங்கள் ஊடாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. நான் கொலை செய்வதில்லை யாரோ கொலை செய்ததால் கிடைத்த புலாலைத்தான் நாம் உண்கிறோம் என்கின்ற விதண்டாவாதத்திற்கும் வள்ளுவர் சாட்டையடி கொடுத்திருக்கிறார். இவ்விதண்டாவாதத்தை மனதிற் கொண்டுதான் கொல்லாமை புலான் மாறுதல் என இரு வேறு அதிகாரங்களை வள்ளுவர் அருளினார் போலும்.

இன்று விஞ்ஞானம் சைவ உணவுக் கோட்பாட்டிற்கு வலுவூட்டுவதுடன் நாம் எவ்வாறு சைவ உணவாளர்களாக இருக்க வேண்டும் எனவும் போதிக்கிறது. மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் ஒரே நோக்குடையவை. உண்மையைத் தேடுதலே இரண்டினதும் நோக்குடையவை. சத்வ குணத்திற்காகவும் அகிம்சை வழிக்காகவும் மட்டுமன்றி வேறுபல காரணங்களுக்காகவும் சைவ உணவுக் கோட்பாடு சிறந்தது என விஞ்ஞான ஆய்வுகள் தெட்டத்தெளிவாகக் காட்டிவிட்டன.

"தமது உணவு மூலமே மிகப் பெரும்பான்மையினர் தமது மரணத்தை வலிந்து வரவழைத்துக் கொள்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தமது உணவை சைவ உணவாக மாற்றினால் நீண்ட காலம் வாழ முடியும்."

"இருதய நோய்கள் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, பெருங்குடல் கோளாறுகள், புற்றுநோய்கள், பித்த நீர்ப்பைக் கற்கள் ஆகிய நோய்கள் சைவ உணவாளர்களிடையே குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. சைவ உணவாளர்களின் குருதியில் கொலஸ்ரல் குறைந்த அளவே காணப்படுகின்றது. சைவ உணவின் பல கூறுகள் இரத்தக் கொலஸ்ரோலைக் குறைப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது."

"தரத்திலோ அளவிலோ பால் - காய்கறி தானியங்களில் இருந்து பெற முடியாதது எதுவுமே புலாலில் இல்லை. போதியளவு பாலும் சரியாகத் தேர்ந்தெடுத்த தாவர உணவும் சேர்த்த சைவ உணவு எந்தவொரு புலால் உணவை விடவும் போஷாக்கில் குறைந்ததல்ல."

"போதியளவு பாலுடன் கூடிய சைவ உணவு உட்கொள்ளும் ஒருவர் புலால் உணவு உண்பவருக்குள்ள பலத்துடனும் ஆரோக்கியத்துடனும் வாழ முடியும்."

என்பன தீர்க்கமான முடிவுகள்.

ஆகவே உடம்பிற்கும் ஆத்மாவிற்கும் சிறந்த உணவு சைவ உணவே என்பதில் ஐயமில்லை.

இந்துக்களில் கணிசமான அளவினர் சைவ உணவாளர்களாக இருக்கின்றனர். பெரும் அளவினர் குறைந்தளவு புலால் உணவு உண்பவர்களாக இருக்கின்றனர். சைவ உணவாளர்களில் யாராவது உடற்பலம் அற்றிருக்கிறார்கள் எனின் அது சைவ உணவின் பிழையல்ல. அது பிழையான சைவ உணவினை உட்கொள்வதால் ஏற்படும் பிழை. இதுவே நம்நாட்டு விஞ்ஞானிகளும் மேல்நாட்டு உணவு விற்பன்னர்களும் கண்ட தீர்க்கமான முடிவுகள்.

ஆகவே சரியான சமநிலை சைவ உணவு என்ன என எமது மக்கள் அறியக்கூடியதாக அறிவுச்சுடர் ஏற்றுவது அவசியம். உடற்பலமும் ஆத்மீக பலமும் மிக்க ஒரு சமுதாயத்தை உருவாக்கச் சைவ உணவுக் கோட்பாட்டின் சிறப்பையும் சரியான சைவ உணவு எது என்பதையும் அறிய வைக்கும் பிரசாரப் பணி முடுக்கிவிடப்பட வேண்டும்.

நம்மிடையே இக்காலத்தில் குறிப்பாக இளஞ் சந்ததியினரிடையே புலால் உணவு பாவனை அதிகரித்துக் கொண்டு போவதைக் காணக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இது ஏன்?**

மேல்நாடுகளில் சைவ உணவுக் கோட்பாட்டாளர்கள் தொகை அதிகரித்து வருகிறது. புலால் உண்ணும் பாரம்பரியத்தைக் கொண்ட மேல்நாட்டினர் ஏனைய உயிர்கள் மீது கருணை காட்ட வேண்டும் என்று சீவகாருண்யத்தினாலும் சைவ உணவுக் கோட்பாட்டின் சிறப்பையும் புலால் உண்ணுதலால் ஏற்படும் தீங்குகளையும் ஆராய்ந்து உணர்ந்து முடிவுசெய்து உறுதியான கொள்கை காரணமாகவே சைவ உணவைத் தழுவுகின்றனர்.

நமது நாட்டு சைவ உணவாளரில் பலரும் பாரம்பரியம் காரணமாகவே சைவ உணவாளர்களாக இருக்கின்றனர். உறுதியான கொள்கை காரணமாக சைவ உணவாளராக இருப்பவர் தொகை குறைவு. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் சைவ உணவுக் கோட்பாடு சமயத்தை அடிப்படையாகக் கொண்டுடெழுந்தது. அதனால் சைவ உணவாளர்களாக இருக்கும் எம்மில் பலருக்கு நாம் ஏன் சைவ உணவாளர்களாக இருக்கிறோம் என்பது பற்றியோ அல்லது எது சரியான வகைச் சைவ உணவு வகை என்பது பற்றியோ எதுவும் தெரியாது.

- மேற்கூறிய அறியாமை
- மேல்நாட்டினரைப் போல வாழ வேண்டும் - நவீனம் அடைதல் வேண்டும் - என்ற இளைஞர்களிடையே வளர்ந்துவரும் மனக் கிளர்வுகள்.
- மேல்நாட்டினர் எல்லாம் அசைவ உணவுக்காரர் அதனாலேயே அவர்கள் சகல துறைகளிலும் முன்னிற்கிறார்கள் என்ற தவறான எண்ணம்.
- அறிவிலிகள் சிலரால் பரப்பப்படும் புலால் உணவு உண்ணுவதுதான் போஷாக்கைத் தரும் உடற் பலம் தரும், நோய் அணுகாது போன்ற தவறான தகவல்கள்.
- புலால் உணவு உண்பது நாகரிகமானது என்ற மன மயக்கம்

ஆகியனவெல்லாம் எமது இளைஞர்களை புலால் உண்ணத் தூண்டுகிறது.

**மகாத்மாகாந்தியின் உணவுக் கோட்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள்.**

மகாத்மா காந்தியின் பெற்றோர் தீவிர வைஷ்ணவர்கள். குஜராத் மாநிலத்தில் வைஷ்ணவ சமயமும் சமய சமயமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்குப் பெற்றவை. இரு சமயத்தினரிடையேயுமே புலாலுணவுக்குப் பலத்த எதிர்ப்பும் வெறுப்பும் இருந்து வந்தது.

''நான் புலால் உண்டேன் என்பதை அறிந்த கணத்திலேயே அவர்கள் (எனது பெற்றோர்) அதிர்ச்சியினால் செத்து விடுவார்கள் என்பதையும் அறிவேன்''

என மகாத்மா சத்திய சோதனையில் எழுதுமளவிற்கு புலால் மறுப்பில் தீவிரமானவர்கள் மகாத்மாவின் பெற்றோர்.

மகாத்மா உயர்தர பள்ளியில் படிக்கும் போது அவருக்கு அதிக நண்பர்கள் இருக்கவில்லையாயினும், ஒரு கூடா நட்பு எவ்வாறோ ஏற்பட்டுவிட்டது. ராஜ்கோட் முழுவதிலும் 'சீர்திருத்தம்' என்ற அலையின் வேகம் மிகுந்திருந்த காலமது. அந்த 'நண்பன்', ''புலாலுண்ணாமையால் தான் நீ பலமில்லாதவனாக இருக்கின்றாய். ஆங்கிலேயர் புலால் உண்பதாலேயே எம்மை ஆள முடிகிறது. புலாலைச் சாப்பிட்டு அது எவ்வளவு பலத்தைக் கொடுக்கிறது பார்'' என்று காந்தியின் மனதிற்குப் படும்படி பலதடவை எடுத்துக் கூறியபடியிருந்தான். ஏற்கனவே காந்தியின் மூத்த சகோதரன் இவனின் சேர்க்கையால் புலால் உண்ண ஆரம்பித்துவிட்டார். அதனால் தமையனாரும் புலால் உண்பதை ஆதரித்தார்.

இவை காந்தியில் அதற்குரிய விளைவை உண்டுபண்ணியது.

''புலால் உணவு நல்லது; அது என்னைப் பலமுள்ளவனாகவும் தைரியசாலியாகவும் மாற்றும்; நாடு முழுவதுமே புலால் உணவு உட்கொள்ள ஆரம்பித்துவிட்டால் ஆங்கிலேயரை வென்றுவிடலாம்'' என்ற எண்ணம் காந்தியின் மனதில் வளர்ந்தது. இறுதியில் காந்தி, 'நண்பனின்' தூண்டிலில் விழுந்துவிட்டார். சுமார் ஓராண்டு காலம் 'நண்பனுடன்' சேர்ந்து ஆட்டிறைச்சிப் பலகாரங்களை ருசித்துச் சாப்பிட்டு வந்தார். காந்தி சகோதரர்கள் இருவரும் இரகசியமாக மாமிசம் புசிப்பது பெற்றோருக்குத் தெரியாது. ஆனால் ''பெற்றோரை ஏமாற்றுகிறேனே; அவர்கள் இதை அறிந்தால் அதிர்ச்சியடைவார்களே'' என்ற சிந்தனை காந்தியின் ''உள்ளத்தை அரித்துத் தின்றுகொண்டேயிருந்தது''

ஆகவே காந்தி தனக்குத்தானே பின்வருமாறு சொல்லிக்கொண்டார்.

''மாமிசம் சாப்பிட வேண்டியது முக்கியம் தான்; நாட்டின் சாப்பாட்டில் சீர்திருத்தம் செய்ய வேண்டியதும் அவசியமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாலும் தாயிடமும் தந்தையிடமும் பொய் சொல்லி ஏமாற்றிக்கொண்டிருப்பது மாமிசம் சாப்பிடாததைவிட அதிக மோசமானது. ஆகையால் அவர்கள் உயிரோடு இருக்கும் வரையில் நான் மாமிசம் சாப்பிடுவதில்லை. அவர்களுக்குப் பிற்காலம் நான் சுதந்திரம் பெற்றுவிடுவேன். அப்பொழுது நான் மாமிசத்தைப் பகிரங்கமாகவே சாப்பிடுவேன். ஆனால் அச்சமயம் வரும் வரையில் நான் அதைச் சாப்பிடாமல் இருந்து விடுவேன்''.

இந்த முடிவை எடுத்த பின்னர், அதை 'நண்பருக்கும்' தெரிவித்துவிட்டு, மாமிச உணவை நிறுத்திக்கொண்டார். பெற்றோரிடம் பொய் சொல்லக்கூடாது என்ற தனது புனிதமான ஆசை காரணமாகவே மாமிசம் உண்பதைக் காந்தி கைவிட்டார்.

சில வருடங்கள் உருண்டோடின. பாரிஸ்டர் பட்டப்படிப்பு மேற்கொள்ள காந்தி இங்கிலாந்து போகவேண்டி ஏற்பட்டது. தாயாருக்கோ மகனை அனுப்ப விருப்பமில்லை. காரணம் இங்கிலாந்து செல்பவர்கள் அங்கு மாமிசம் சாப்பிடவும், மது அருந்தவும் வேண்டியிருக்கும் என்பதே. இறுதியில், ''மதுபானம், பெண், மாமிசம் ஆகியவைகளைத் தொடுவதில்லை" எனத் தாயாருக்கு சத்தியம் செய்து கொடுத்த பின்னரே மகாத்மா காந்தியை இங்கிலாந்து செல்ல அவரது தாயார் அனுமதித்தார். கப்பல் பிரயாணத்தின் போது இங்கிலாந்தில் முதல் ஓரிரு மாதமும் சைவ உணவு பெற்றுக்கொள்வதில் மகாத்மாவுக்குக் கஷ்டங்கள் இருந்தன. கிடைத்த உணவும் உருசியற்றுச் சப்பென்றிருந்தன. சைவ உணவு விரதம் அசௌகரியமாக இருந்தது. நண்பர்கள் மாமிசம் சாப்பிடும்படி ஓயாமல் கூறிக்கொண்டிருந்தனர். அச்சந்தர்ப்ப சூழ்நிலையில் மேற்கொண்டு என்ன நடந்தது என்பதை மகாத்மாவே ''சத்திய சோதனை" என்ற தமது சுயசரிதையில் பின்வருமாறு கூறுகிறார்.

''சைவச் சாப்பாடு விடுதி எங்காவது இருக்கிறதா என்று தேட முற்பட்டேன். அத்தகைய சாப்பாட்டு விடுதிகள் நகரில் இருக்கின்றன என்று நான் தங்கியிருந்த வீட்டுக்கார அம்மாள் கூறியிருந்தார். தினம் பத்து பன்னிரண்டு மைல் தூரம் சுற்றுவேன். மலிவான சாப்பாட்டு விடுதிக்குப் போய் அங்கே வயிறு நிறைய ரொட்டியைத் தின்பேன். என்றாலும் எனக்குத் திருப்தி ஏற்படாது. இவ்வாறு சுற்றி வரும் போது ஒருநாள் படிங்ரன் தெருவில் ஒரு சைவச் சிற்றுண்டிச் சாலையைக் கண்டுபிடித்தேன். அதைக் கண்டதும் தன் மனதிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியதைக் கண்டதும் ஒரு குழந்தைக்கு என்ன குதூகலம் ஏற்படுமோ அவ்வளவு ஆனந்தம் எனக்கு உண்டாயிற்று. அதற்குள் பிரவேசிக்கும் முன், கதவுக்கு அருகில் கண்ணாடி யன்னலில் விற்பனைக்காகப் புத்தகங்கள் வைக்கப்பட்டிருந் ததைக் கண்டேன். அவற்றில் சால்ட் எழுதிய ''சைவ உணவின் முக்கியத்துவம்'' என்ற நூலும் இருந்தது. அதை வாங்கிக்கொண்டு நேரே சாப்பாட்டு அறைக்குச் சென்றேன். இங்கிலாந்து வந்த பிறகு நான் வயிறார உண்ட முதல் சாப்பாடு இதுதான். கடவுள் எனக்குத் துணை செய்து விட்டார்''.

''சால்ட் எழுதிய நூலை ஒருவரி விடாமல் படித்து முடித்தேன். அது என் மனதைப் பெரிதும் கவர்ந்தது. அந்தப் புத்தகத்தைப் படித்த நாள்முதற்கொண்டே, என் சுயவிருப்பின் பேரில் நான் சைவ உணவு விரதம் பூண்டவனானேன் என்று நான் சொல்லிக்கொள்ள முடியும். என் தாயாரின் முன்பு நான் விரதம் எடுத்துக்கொண்ட நாளை வாழ்த்தினேன். சத்தியத்தைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகவும் நான் எடுத்துக்கொண்டிருந்த விரதத்திற்காகவுமே இதுவரை நான் புலால் உண்ணாமல் இருந்துவந்தேன். ஆனால் அதேசமயத்தில் ஒவ்வொரு இந்தியரும் மாமிசம் சாப்பிடுபவராக இருக்க வேண்டும் என்று விரும்பி வந்தேன். ஒருநாள் நானும் தாராளமாகவும் பகிரங்கமாகவும் அப்படி சாப்பிடுபவன் ஆக வேண்டும் என்றும் மற்றவர்களையும் இதற்குத் திருப்ப வேண்டும் என்றும் கருதி அந்த நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுது நான் சைவ உணவு விரதத்தை விரும்பி மேற்கொண்டு விட்டதால் இதைப் பரப்புவதே என் வாழ்க்கை இலட்சியமாயிற்று.

சைவ உணவில் நான் கொண்ட நம்பிக்கை நாளுக்குநாள் வளர்ந்து வந்தது. உணவு சம்பந்தமான ஆராய்ச்சி நூல்களைப் படிக்க வேண்டும் என்ற பசியை சாள்டின் புத்தகம் எனக்கு உண்டாயிற்று. சைவ உணவைப் பற்றிக் கிடைத்த புத்தகங்களை எல்லாம் வாங்கி வாசித்தேன். ஹோவாட்ஸ் வில்லியம்ஸ் எழுதியிருந்த ''உணவு முறையின் தர்மம்'' (The Ethics of Diet) என்ற நூல் ஆதி காலத்திலிருந்து இன்றுவரை மனிதரின் உணவு வகையைப் பற்றி எழுதப்பெற்ற எல்லாப் புத்தகங்களின் வரலாற்றுச் சரித்திரத்தையும கூறுகிறது. பைதகரஸ் ஏசுநாதரிலிருந்து தற்காலத்தில் வாழ்கின்றவர் வரை எல்லாத் தத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானிகளும் தீர்க்கதரிசிகளும் சைவ உணவு உட்கொள்பவர்களாகவே இருந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டவும் இந்நூல் முயன்றிருக்கின்றது. டாக்டர் அனாகிங்ஸ்போட் எழுதிய உணவு முறையில் சரியான வழி (The perfect way in diet) என்ற நூலும் கவர்ச்சியானது. தேகாரோக்கியத்தையும் சுகாதாரத்தையும் குறித்து டாக்ரர் அலிங்ஸ்ரன் எழுதியிருந்தவையும் அதேபோல் உதவியாக இருந்தன. உணவை ஒழுங்குபடுத்துவதன் மூலமே நோயைக் குணமாக்கும் முறையை அந்த நூலில் அவர் எழுத்துக் கூறியிருந்தார். அவர் சைவ உணவை மாத்திரமே சாப்பிடுபவர். ஆகையால் தம்மிடம் வரும் நோயாளிகளுக்கும் கண்டிப்பான சைவ உணவு யோசனையைச் சொல்லி வந்தார். இந்த நூல்கயையெல்லாம் படித்ததன் பலனாக உணவு ஆராய்ச்சி செய்வதும் என் வாழ்க்கையிலே முக்கியமான இடம்பெற்றுவிட்டது.

'மேலும் மேலும் ஆழ்ந்து நான் ஆன்ம பரிசோதனை செய்யச் செய்த எனது அக வாழ்விலும் புற வாழ்விலும் அதிக மாறுதல்களைச் செய்ய வேண்டியது அவசியம் என்ற உணர்ச்சி என்னிடம் வளரலாயிற்று...... சைவ உணவின் முக்கியத்துவத் தைக் குறித்து எழுதிய நூலாசிரியர்கள் அவ்விசயத்தை வெகு நுட்பமாக பரிசீலனை செய்திருந்ததைக் கண்டேன். இவ்விடயத்தின் மத, விஞ்ஞான, அனுபவ, மருத்துவ அம்சங்களை எல்லாம் அவர்கள் ஆராய்ந்திருந்தனர். தர்மக் கோட்பாட்டு ரீதியில் அவர்கள் ஒரு முடிவிற்கும் வந்தனர். தாழ்வான உயிரினங்களிலும் மனிதன் உயர்வானவன் என்றால் தாழ்ந்த உயிரினங்களைத் தின்று மனிதன் உயிர் வாழ்வது என்பது அவ்வுயர்வின் நோக்கமல்ல. உயர்ந்த இனங்கள் தாழ்ந்த இனங்களைப் பாதுகாக்க வேண்டும். மனிதனுக்கு மனிதன் உதவிக்கொள்வதைப் போல அவ்விரு இனங்களுக்கும் தம்மிடையே பரஸ்பரம் உதவிக்கொள்ள வேண்டும் என்பது அந்நூலாசிரியர்கள் கண்ட முடிவு. மனிதன் உண்பது உயிர் வாழ்வதற்கே அன்றி சுகானுபவத்திற்காக அல்ல என்பதையும் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

'அனுபவ, பொருளாதார விவாதத்தின் பிரகாரம் சைவ உணவு சாப்பிடுவதால் ஏற்படும் செலவே மிகக் குறைவு என்பதை நிரூபித்தனர். இந்தக் காரணங்கள் எல்லாம் என் மனதில் மாறுதலை உண்டாக்கின. பலவகைப்பட்ட சைவ உணவு வாதிகளையும் சைவ உணவு விடுதிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தித்தித்தேன். இங்கிலாந்தில் சைவ உணவாளர் சங்கம் ஒன்று இருந்தது. அவர்கள் சொந்தமாக ஒரு வாரப் பத்திரிகையும் நடத்தினர். அப்பத்திரிகைக்கு நான் சந்தாதாரர் ஆனேன். அச்சங்கத்தில் சேர்ந்து வெகு சீக்கிரத்திலேயே அதன் நிர்வாகக் குழுவிலும் உறுப்பினன் ஆனேன். சைவ உணவுப் பிரசார இயக்கத்தின் தூண்கள் என்று கருதப்பட்ட முக்கியஸ்தர்களுடன் இச்சங்கத்தில் எனக்குப் பழக்கம் ஏற்பட்டது.

ஒரு மதத்தில் பிறந்தவர்களை விட அம்மதத்திற்குப் புதிதாக மாறியவர்களுக்கு அம்மதத்தினிடம் அதிக அன்பு இருப்பது இயல்பு. சைவ உணவு என்பது அப்பொழுது இங்கிலாந்திற்கு ஒரு புதிய தருமம். எனக்கும் அப்படியே. ஏனெனில் மாமிசம் சாப்பிட வேண்டியது அவசியம் என்பதில் திட நம்பிக்கை உள்ளவனாக நான் இங்கிலாந்து சென்றேன். ஆனால் அறிவாராட்சி மூலம் சைவ உணவே சிறந்தது என்ற கொள்கைக்கு மாறியவனாகையால் சைவ உணவு சம்பந்தமாகப் புதிதாக மதம் மாறியவர்களுக்கு இருக்கும் உற்சாகம் எனக்கும் இருந்தது.

மகாத்மாகாந்தி மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் போது இருந்த மனவுணர்வே இன்றும் இங்கு எமது இளம் சந்ததியினர் மத்தியிலே காணப்படுகின்றது.

மகாத்மாகாந்தி இங்கிலாந்து செல்லவேண்டி ஏற்பட்டு அங்கு சைவ உணவுக் கோட்பாட்டின் மேன்மையைப் பற்றி மேல்நாட்டார் பற்றி நூல்களைப் படித்ததால் அவர் பாரம்பரியத்தாலும் தாயாருக்கு அளித்த வாக்குறுதி காரணமாகவும் சைவ உணவாளராக இருந்த நிலையில் இருந்து உறுதியான கொள்கை காரணமாக சைவ உணவாளராகத் தம்மை உயர்த்திக் கொண்டார். மகாத்மாகாந்தி இங்கிலாந்து சென்று நூல்களைப் படிக்கும் சந்தர்ப்பம் ஏற்படாது இருக்குமாயின் அவர் தமது பெற்றோர் இறந்த பின் புலால் உண்பவராகவும் எல்லா இந்தியரையும் புலால் உண்ண ஊக்குவிப்பவராகவும் மாற்றியிருப்பார்.

மகாத்மாகாந்தி பேர்னாட்ஷா டால்ஸ்டாய் மற்றும் சைவ உணவுக் கோட்பாட்டைத் தழுவியுள்ள கோடிக்கணக்கான மேல்நாட்டவர்கள் போல் எமது இளம் சந்ததியினரும் பாரம்பரியத்தால் மட்டுமன்றி உறுதியான கொள்கை காரணமாகச் சைவ உணவாளர்களாக மாறி வாழ வழிகாட்டுவது எமது சமுதாயக் கடப்பாடுகளில் ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு அவர்களிடையே உள்ள சமயக் கோட்பாடுகள் பற்றிய அறியாமையும் சைவ உணவைவிட புலால் உணவே சிறந்தது போன்ற தப்பான எண்ணங்களும் அகற்றப்பட வேண்டும்.

சரியான சமனிலை சைவ உணவு பற்றிய தகவல்கள் ஒவ்வொருக்கும் அறியத்தரப்பட வேண்டும். மகாத்மாகாந்தியை மீட்டெடுக்க அவருக்குக் கிடைத்தது போன்ற நூல்கள் எமது இளஞ் சந்ததியினருக்கு - அவர்களது தாய்மொழியில் - கிடைக்கச்செய்தல் வேண்டும்.

சமய நோக்கில் சீவகாருண்ய நோக்கில் உடல் நல நோக்கில் சைவ உணவுக் கோட்பாடு சிறந்தது என்பதை எமது இளஞ் சந்ததியினருக்கு அறிவுபூர்வமாக எடுத்துக்காட்டிச் சிந்திக்க வைப்பத சமூக சமய அபிமானிகள், சபைகள், நிறுவனங்கள் எல்லாவற்றினதும் தலையாய அவசர கடமையாகும்.

**பேராசிரியர் இ. குமாரவடிவேல்,**
பீடாதிபதி, விஞ்ஞானபீடம்,
யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "மேன்மைகொள் சைவநீதி"

எமது பண்பாட்டு மரபிலே எல்லாப் படிநிலைகளையும் கடந்து உச்சியிலே நிறைவுடைய சமயமாகச் சைவம் அரசோச்சுகின்றது என்பது ஞானபக்தராகிய தாயுமானவரின் அனுபூதி வாக்காகும். அனைத்துச் சமயங்களும், சமய நெறிகளும், சமய நூற் கொள்கைகளும் தன்னகத்தே படிநிலைகளாக அமைய இவையனைத்தையும் கடந்த மேடைமீது சிம்மாசனத்திலே பொலிந்து விளங்கும் ஆன்மீக ஆட்சியில் அமர்ந்தது சைவசமயம் என்பது இந்த ஞானியின் உள்ளக் காட்சியாகும்.

**இயல் பென்றுந் திரியாமல் இயமமாதி**
**எண்குணமுங் காட்டி அன்பால் இன்பமாகிப்**
**பயனருளப் பொருள்கள்பரி வார மாகிப்**
**பண்புறவுஞ் சௌபான பட்சங்காட்டி**
**மயல் அறுமந் திரஞ்சிட்சை சோதிடாதி**
**மற்றங்க நூல் வணங்க மௌனமோலி**
**அயர்வறச் சென்னியில் வைத்து ராசாங்கத்தில்**
**அமர்ந்தது வைதிக சைவம் அழகிதந்தோ.**

எனச் சைவத்தின் பெருமையைப் பாடுகின்றார். சைவ சமயம் இன்ன காலத்தைத் தோற்றுவாயாகவுடையது என்று கூற முடியாதவாறு காலத்தால் தொன்மையுடையது. சைவ மரபின் சிறப்பினைக் கூறும் அனைத்து நூல்களும் இச்சமயத்தின் பிரமாண நூல்களாகிய வேதங்களையும் ஆகமங்களையும் ஏற்றுக்கொண்டுள்ளன. சிவனைப் பரம்பொருளாகக் கொண்டு அப்பரம் பொருளை அறியவும் அடையவும் வழிவகைகளைக் கூறும் வகையால் சிவாகமங்கள் சிறப்புப் பெறுகின்றன. இவற்றை இறைவன் நூல் எனப் போற்றப்படும் மரபு இச்சமயத்திற்கே உரியது. இப்பிறவியின் நல்நோக்கத்தை நிறைவேற்றுவதற்குரிய வழிவகைகளைக் கூறும் கருவூலமாக இவை உள்ளன. ஆகவேதான் இற்றைக் காலம் வரை எமது சமய மரபில் அவை சமயம், தத்துவம், கலை ஆகிய துறைகளில் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. இறை வழிபாட்டிற்குரிய வழிவகைகளை ஏற்படுத்திய வகையிலும் இவை சிறப்புப் பெறுகின்றன. இதே நிலையில் திருமுறைகளும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ எமக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன. நாம் எடுத்த பிறவியின் முக்கிய நோக்கம் இறைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடிகளைச் சேர்தல் ஆகும். எனவே அத்திருவடிகளைச் சிந்தித்தலும் துதித்தலும் வணங்குதலும் எமது முக்கிய கடமைகளாக அமைந்துள்ளன. அகநிலையிலும் புறநிலையிலும் இச்சமயஞ் சார்ந்த ஒருவன் தூய்மைபெற ஏற்ற வழிவகைகள் இவற்றில் கூறப்பட்டுள்ளன. அளவையியலாலும் அறிவாராய்சியியலாலும் ஆய்ந்து நிறுவப்பெற்ற கொள்கைகள். இச்சமயத்தின் மாட்சிக்கு உலைகல்லாக உள்ளன. உயர்ந்த கொள்கையால் உலகில் ஏனையற்றிலும் தழைத்து ஓங்கியும் அனுபவ நுட்பத்தால் ஏனையவற்றிலும் விளக்கமாகவும் எளிமையாகவும் நின்ற காரணத்தால் இச்சமயம் தனக்கேயுரிய சிறந்த மரபினை ஏற்படுத்திக்கொண்டது. முதனூல்களாகிய வேதம் ஆகமம் ஆகயவற்றின் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு சமய இலக்கியங்கள் விரிவடைந்தன.

**தேவர் குறளுந் திருநான் மறை (முடிவும்)**
**மூவர் தமிழும் முனிமொழியுங் - கோவை**
**திருவா சகமுந் திருமூலர் சொல்லும்**
**ஒருவா சமமென் றுணர்.**

என்ற ஔவையாரின் வாக்கு, சமய இலக்கிய மரபின் சிறக்கினை உணர்த்துகின்றது.

சைவசமய மரபின் மற்றுமொரு சிறப்பம்சம் இறைவனது உண்மையினை அடிப்படையாக வைத்து, ஒழுக்க நெறியினை உணர்த்துவதாகும். ஒழுக்கம் இருவகைகளாகக் கூறப்படும். ஒன்று பொது ஒழுக்கம்; மற்றையது சிறப்பொழுக்கம். அன்பு, ஒழுக்கம், ஆசாரம், தவம், தானம், வாய்மை, வணங்கல், அடக்கம், அறவழி, நிற்றல் போன்றவை பொது ஒழுக்கத்தில் அடங்குவன.

இறைவனது அருளாற்றலில் ஊன்றி மனம் வைத்து உணர்ந்து அவனது அருட் பெருங் குணங்களில் தோய்ந்து இறுதியில் அவன் வண்ணமாய் ஒன்றுதற்கு முயற்சி செய்தல் சிறப்பொழுக்கமாகக் கொள்ளலாம். இவ்வொழுக்கத்தினைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாக்காக வகுத்துக் கூறும் மரபு வைத்திற்கே உரியதொன்று. சிவாகமங்கள் கூறிநிற்கும் இவ்வொழுக்க மரபுக்கமைய வாழ்ந்து காட்டிய சிறப்பு சிவனடியாளர்களாகிய சமயாசாரியர்களுக்கே உரியது. தமது வாழ்க்கையைச் சிவமணங்கமழும் ஒன்றாக ஆக்கிச் சிவனுக்கே தம்மை அர்ப்பணித்ததன் பயனாய், சிவனுக்கு வழங்கப்படும் பெருமையை அடியாருக்கும் வழங்கும் மரபு சைவசமயத்தில் ஏற்படலாயிற்று. குருலிங்க சங்கமம் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. சிவனடியார் மேல் அன்புடையராதல் ஓர் உயர்ந்த ஒழுக்கமாய் அமைந்தது.

இத்தகைய ஒழுக்க நெறிகளுக்குரிய நிலைகளனாகவும் பயிற்சிக் கூடமாகவும் அமைந்தது சிவாகமங்கள் சிறப்பித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும் சிவாலயங்கள் ஆகும். இறைவனது திருவுருவங்களை இறைவனாகவே நினைத்து வழிபடும் மரபு சைவத்தில் சிறப்பாக உள்ளது. சிவனை உணரவும் அவன் அருளாற்றலைத் தெளியவும் அருள் நிலையமாகிய ஆலயங்கள் அடியார்களுக்குப் பெரிதும் துணை நின்றன.

குறிகளும் அடை யாளமுங் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரயம் ஓதிலும்
பொறியிலீர் மனம் என்கொல் புகாததே.

என்ற அப்பரின் அருள்வாக்கு. சிவனது பெருமைகளைக் கூறிநிற்கும். எவரெவர் எவ்வெவ்வுருவாய் இறைவனை வழிபடுகின்றனரோ அவரவர் கருதும் உருவாய் நின்று அவர் செய்யும் வழிபாட்டினை ஏற்று அருள்புரியும் பாங்கு சைவ மரபில் சிறந்த வழிபாட்டு மரபினுக்கு அணிகலனாக உள்ளது. சிவ வழிபாட்டுக்குத் துணைபுரியும் சாதனங்கள் எண் வகையாக அமையும் மரபினை மூவர்தமிழ் எமக்கு உணர்த்தி நிற்கின்றது. சிவ சின்னமாகிய திருநீறு, குருவருள், திருவைந்தெழுத்து, திருக்கோயில், இறைவனது திருவடிவங்கள், திருவடி, அர்ச்சனை, தொண்டு என்பன அவை. சேக்கிழாரின் பெரியபுராணம் சைவ சமய மரபினைச் சிறப்பாக எடுத்துக் கூறும் நூலாகும்.

மகா புராணங்கள், இறைவன் பற்றிக் கூறும் அருட்செயல்களைத் தென்னாட்டில் உள்ள தலங்களோடு இணைத்து வழிபாடியற்றும் மரபு இங்கு குறிப்பிடத்தக்கது. 'தென்னாடுடைய சிவனே போற்றி' என மணிவாசகர் போற்றியருளியவாறு தென்னாட்டிலே இறைவன் பல்வேறு வடிவங்களில் எழுந்தருளி அருள்பாலிக்கும் தலங்கள் பல. இறைவனுக்குத் திருக்கோயிலை நிர்மாணிப்பதிலும் பேணிப் பாதுகாப்பதிலும் பல்லவ மன்னர்களும் சோழப் பெரு மன்னர்களும் பெருந்தொண்டு புரிந்தனர். இவர்களது அரிய தொண்டுகளால் சைவ சமய மரபு மேன்மையுற்றது. இவ்வாலயங்களை நிலைக்களகாகக் கொண்டு சைவ மரபினை மக்கள். கைக்கொண்டு வாழ நாயன்மார்கள் வழியமைத்தனர். நாயன்மார்களது திருப்பதிகங்களை இறைவன் சந்நிதியில் ஓதி உணர்வு பெறும் மரபு சைவத்திற்கே உரியதொன்று. 'திருப்பதியம் விண்ணப்பம் செய்யும்' மரபு சோழப் பெருமன்னர் காலத்தில் மேன்மையுற்றது. சிவாகமங்கள் கூறும் வழிபாட்டு மரபினைப் பேணுவதில் காலந்தோறும் எழுந்த சிவாலயங்கள் முக்கியத்துவம் பெற்றன. தென்னாட்டில் ஆலயங்களின் மதிப்பு உயர்ந்து வந்தவிடத்தும் நாயன்மாரது பாடல்பெற்ற தலங்களுக்குச் சிறப்பான நிலை அமைந்தது. அத்தலங்களுக்கு அடியார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் வாழ்நாளில் அடிக்கடி சென்று வழிபடும் மரபு ஏற்படலாயிற்று. தலயாத்திரை மரபு சிறப்படைந்தது. சிதம்பரமும் மதுரையும் மயிலாப்பூரும் திருவாரூரும் ஏனைய தலங்களை விடப் பெருமை பெற்றன. இத்தகைய தலங்களில் பலவற்றுக்கு அவற்றின் சிறப்பினைக் கூறும் தலபுராணங்கள் எழுந்தன.

ஊர்தோறும் கோயில்கள் எழுந்து சைவ மரபின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தன. ஊரில் வாழ்ந்த மக்களது சமய வாழ்க்கைக்கு நிலைக்களனாக அவை அமைந்தன. கோயிலுக்கு 'நாகர்' என்று பெயர். 'முக்கட் செல்வர் நகர்', 'பூ முடி நாகர் நகர்' என்ற சங்க நூல்களில் வரும் தொடர்கள் மூலம் இதனை அறியலாம். கோயில்களாகிய நகரைச் சுற்றிப் படர்ந்ததே நாகரிகம். சைவ மரபின் நிகழ்கால வடிவமாக விளங்கியது திருக்கோயில், சிற்பம், விக்கிரக்கலை, கட்டிடக்கலை, இசை, நடனம், அணிகலன்கலை, அலங்காரக்கலை, ஓவியம் ஆகிய பல கலைகளும் வளர்வதற்கு ஏற்ற வாய்ப்பணித்தது திருக்கோயில் வழிபாடு. கோயிற் கட்டிடக் கலையிலும் நைமித்திகப் பூசைகளிலும் பல கலைஞர்கள் தம் கலையாற்றலைக் காட்டினர். ஆகம மரபு கோயில் மரபுக்கு வழியமைத்தது. பண்ணும் பரதமும் வளர்ச்சி கண்டன. சைவத் திருமுறைகள் திருக்கோயில் வழிபாட்டிற்கும் பக்திக்கும் தத்துவ மரபுக்கும் வழிவகுத்தன. இவை யாவற்றையும் உள்ளடக்கிய திருக்கோயில் வழிபாடு சைவ மரபிற்கு அணிகலனாக அமைந்தது. கோயிலின் சிறப்பால், வழிபாட்டு மரபால், கலைகளின் சிறப்பால், பக்தி நலத்தினால் சைவ வளர்ச்சி கண்டது.

**ஆக்கையாற் பயனென்**
**அரன் கோயில் வலம் வந்து**
**பூக்கையா லட்டிப் போற்றி யென்னாத விவ்**
**வாக்கையாற் பயனென்.**

என அப்பர் பெருமான் திருக்கோயில் வழிபாட்டின் சிறப்பினைக் கூறி, எமது சரீரம் அதற்காகவே இறைவனால் அருளப்பட்டதென்ற உண்மையை எமக்கு உணர்த்துகின்றார். எமது அங்கங்கள் ஒவ்வொன்றும் திருக்கோயில் வழிபாட்டில் இணைய வேண்டும் என்பது அப்பரது திருவுள்ளக் கிடக்கை.

நாவலர் முதல் இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை வரை எமது நாட்டில் வாழ்ந்த சமயப் பெரியார்கள் இச்சைவ மரபின் சிறப்பினைத் தமது பேச்சுக்களினாலும், எழுத்துக்களினாலும் உரம்பெறச் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. எமது நாட்டிலே பிற சமயத் தாக்கங்களிலிருந்து சைவத்தைக் காத்த பெருமை நாவலருக்கேயுரியது. சைவ மரபின் காவலன் எனப் போற்றத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுந்த அப்பெருமானின் தூய சமய மரபு சார்ந்த நற்பணிகளை வியந்து, நயந்து நயந்து சைவ மரபிற்கு ஓர் இலக்கணமாகத் திகழ்ந்த சைவ பூஷணம் திரு.நம.சிவப்பிரகாசம் அவர்கள் 'நாவலர் நயம் - இறை ஒளி வெண்பா' என்ற நூலில் பாடியுள்ளார், நாவலர் காட்டிய சைவ மரபில் வாழாதார் வாழ்க்கையினால் என்ன பயன் என் அந்நூலில் வினா எழுப்புவது இங்கு சிந்தனைக்குரியது.

அந்நோக்கில் நாவலர் மாணவர் வழிவந்த யாழ்ப்பாணத்து மேலைப் புலோலி சதாவதானம் நா.சதிரவேற்பிள்ளை அவர்களது 'சிவஷோத்திர மகோற்சவ உண்மை' என்ற நூல் சைவ மரபில் திருக்கோயிலின் மேன்மையைத் தக்க நூல்களின் பிரமாணங்கள் வழி எடுத்துக் கூறுகின்றது. சிவ விளக்கம், ஷோத்திர ஆலய விளக்கம், மகோற்சவ விளக்கம் என்ற தலைப்புக்களில் திருக்கோயில் மரபினை விளக்கி நிற்கின்றது.

சைவ மரபின் மேன்மையான ஒழுக்கம் 'சிவ' என்னும் திருநாமத்தை உள்ளன்புடன் ஓதி உணர்தலாகும். 'சிவ' என்னும் திருநாமத்தை அன்புடன் உச்சரித்தலினாலும், கேட்டலினாலும் அனைத்துப் பாவங்களும் அகன்று விடும் என்ற நம்பிக்கை எம்மிடையே ஆழமாக உள்ளது.

**சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்**
**கோத்தி ரமுங்கு லமுங் கொண்டென் செய்வீர்**
**பாத்திரஞ் சிவமென்று பணிதி ரேல்**
**மாத்தி ரைக்குள் அருளுமாற் பேறரே.**

என வரும் அப்பர் தேவாரம் இதன் சிறப்பினை விதந்தோதுகின்றது.

***சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்***
***சிவசிவ வென்றிடத் தீவினை மாளுஞ்***
***சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்***
***சிவசிவ வென்னச் சிவகதி தானே.***

என 'சிவ' என்ற திருநாமத்தினைப் போற்றுகின்றது திருமந்திரம்.

சிவன், அநாதி மல பெத்தர்களாகிய ஆன்மாக்கள் தம்மையறிந்து வழிபட்டுய்யும் காரணத்தினால் அருவம், அருவுருவம், உருவம் என்று முத்திறத் திருமேனி கொண்டருளினார் என்பது சைவசாத்திரத் துணிபு.

**உருமேனி தரித்துக் கொண்ட**
**தென்றலு முருவி றந்த**
**வருமேனி யதுவுங் கண்டோ**
**மருவுரு வான போது**
**திருமேனி யுபயம் பெற்றோஞ்**
**செப்பிய மூன்று நந்தங்**
**கருமேனி கழிக்க வந்த**
**கருணையின் வடிவு தானே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என சிவஞான சித்தியார் கூறும் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கம் சிவசக்தி தத்துவத்தைத் தன்னுள் கொண்டு விளங்குவது. சிவனது வடிவங்களுள் நடராஜ வடிவம் சிறப்புடையது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய இறைவனது பஞ்ச கிருத்தியங்களது தத்துவத்தைப் பிரதிபலிப்பது இவ்வடிவம். சைவ மரபில் சிறப்பிக்கப்படும் ஐந்தெழுத்தின் தத்துவமாய் விளங்குவது இவ்வடிவம். இறைவன் மந்திர வடிவினனாய்த் தோன்றி ஆன்மாக்களுக்கு அருள் புரிகின்றார் என்ற தத்துவத்தை எடுத்தியம்புவதும் இவ்வடிவமே. நடராஜ வடிவம் திருவைத்தெழுத்தாகிய 'நமசிவாய', 'சிவாயநம' ஆகியவற்றுடனும் மற்றும் ஐந்தொழில்களோடும் கொண்டு விளங்கும் தொடர்பினைத் தேவாரங்களும் திருமந்திரமும் சைவசித்தாந்த நூலாகிய உண்மை விளக்கமும் மிக விரிவாகக் கூறுகின்றன. நமச்சிவாய என்பதன் உயர் சிறப்பினை அப்பர் தெளிவுபடக் கூறுகின்றார்.

**நமச் சிவாயவே ஞானமுங் கல்வியும்**
**நமச் சிவாயவே நானறி விச்சையும்**
**நமச் சிவாயவே நாநவின் றேத்துமே**
**நமச் சிவாயவே நன்னெறி காட்டுமே.**

என்பது அப்பரது அருள்வாக்கு. நமச்சிவாய என்பது எமது வாழ்க்கைக்குரிய நன்நெறி காட்டும் வழிகாட்டி என்பது அப்பரது சிந்தனையாகும். இவை யாவற்றுக்கும் உண்மை விளக்கமாக நின்று சைவ சித்தாந்த உண்மைப் பொருளை எமக்கு உணர வைப்பது நடராஜ வடிவம். சமயம், தத்துவம், கலை ஆகிய முத்திறத்திற்கும் நிலைக்களனாக உள்ள இவ்வடிவம் சைவசித்தாந்த பதி உண்மைக்கு நல்லதொரு விளக்கமாக உள்ளது. ஆன்மாக்கள் தளைய நீக்கி இறைவன் அருளைப் பெற்று அவனடிக்கீழ் இன்பம் துய்ப்பதற்குரிய வழிவகைகளை எடுத்துக் கூறுவது சைவசித்தாந்தம். சைவசித்தாந்த தத்துவங்களுக்கு உரிய விளக்கமாய் அமைவது திருக்கோயிலும் அங்குள்ள இறைவன் திருவடிவங்களும் அவற்றுக்கு நிகழும் கிரியைகளுமாகும். சிறந்ததொரு கிரியை மரபு ஆன்மாக்களின் மனப் பக்குவத்திற்கு வழிகாட்டி நிற்கும் மாண்பைச் சைவமரபு தன்னகத்தே கொண்டுள்ளது. 'கிரியையென மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்' எனச் சிவப்பிரகாசம் தரும் கருத்து எமது சிந்தனைக்குரிய தொன்றாகும்.

இவ்வாறு அனைத்துச் சிறப்புக்களையும் ஏனைய சமயங்களை விடத் தன்னகத்தே கொண்டு முடிமணியாய்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகழுவதால் சைவசமயம் அனைவருக்கும் உரிய அனைத்துக் காலத்திற்கும் உரிய சமயமாகவும் பொலிந்து விளங்குகின்றது. சமயாதீதப் பழம் பொருளைத் தில்லை மன்றம் தெளிவு செய்கின்றது. அப்பர் பெருமான் இத்தெய்வீகக் காட்சியை மனிதப் பிறவியின் சிறந்த பேறாகக் குறிப்பிடுகின்றார்.

**குனித்த புருவமுங் கொவ்வைச்**
**செவ்வாயிற் குமிண் சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம்போல்**
**மேனியிற் பால் வெண்ணீறும்**
**இனித்த முடை ய எடுத்தபொற்**
**பாதமுங் காணப் பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே**
**இந்த மாநிலத்தே.**

என்பது அவர் எமக்குத் தரும் நல்லுபதேசமாகும். இத்தில்லை நடராஜ தரிசனத்தைக் காண உலகத்தீரே ஒன்றுகூடுங்கள்; கண்டு களியுங்கள்; பெறற்கரிய மானுடப் பிறவி கழிவதற்குள் இத்திருக்காட்சியை ஒருமுறையேனும் கண்டு விடுங்கள் என எம்மை அழைக்கின்றார் தாயுமானவர்.

**சைவ சமய மே சமயம்**
**சமயா தீதப் பழம் பொருளைக்**
**கைவந் திடவே மன்றுள் வெளிக்**
**காட்டும் இந்தக் கருத்தை விட்டுப்**
**பொய்வந் துழலும் சமயநெறி**
**புகுத வேண்டா ∴ முத்திதருந்**
**தெய்வ சபையைக் காண்பதற்குச்**
**சேர வாரும் செகத் தீரே.**

இத்தகைய உயர்ந்த தத்துவங்களை எமது அனுபவத்திற்குக் கொண்டுவரும் இறைவனது திருவடிவங்கள் சைவ மரபின் மேன்மையை எடுத்துக்காட்டும் சிறப்பு வாய்ந்தவை. காலந்தோறும் சமயம், தத்துவம், கலை ஆகிய மூன்று துறைகளையும் சீர்பட இணைத்து மண்ணிலே நல்லவண்ணம் வாழ வழிவகுக்கும் சைவ சமயத்திற்குரிய சீரிய மரபினை நாம் அனைவரும் உவந்து, நயந்து இப்பிறவியின் பயனை பெறுதல் வேண்டும். சைவ மரபினைப் பேணிப் பாதுகாப்பது எம் ஒவ்வொருவரினதும் தலையாய கடன் ஆகும்.

**பேராசிரியர் கலாநிதி.ப.கோபாலகிருஷ்ணஐயர்,**
வாழ்நாட் பேராசிரியர்,
யாழ்.பல்கலைக்கழகம்.
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானைக் கல்விக்கோட்டம்
# சைவத்திருமுறை விழாவின் வளர்ச்சிப் படிகளில்
# சைவ கலாசார மேம்பாட்டு விழா-2005

மேற்படி சைவத்திருமுறை விழா கடந்த பத்து வருடங்களாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. திரு.ப.விக்கினேஸ்வரன் (முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சங்கானைக் கல்விக்கோட்டம்), திரு.அ.தற்பரானந்தன் (முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர், சங்கானைக் கல்விக் கோட்டம்) இருவரினதும் பெருமுயற்சியினால் ஆரம்பித்த இப்பணி பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரதும் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்று வருவது எதிர்கால சந்ததியினர் எமது கலாசாரத்தை மேம்படுத்துவதற்கும் கலாசார விழுமியங்களின் உச்சப் பயனை அடைவதற்கும் ஏதுவாக அமைந்த ஒரு நிகழ்வாக நாம் உணர்கின்றோம். ஆரம்பத்தில் சைவத்திருமுறைவிழா ஆரம்பிக்கப்பெற்று பத்தாவது வருடத்தை நிறைவுசெய்யும் காலப்பகுதியில் சைவ கலாசார மேம்பாட்டு விழாவாக பரிணமித்து பெரு வளர்ச்சி கண்டுள்ளது. இதன் பயனாக சைவ மக்கள் கொண்டாடும் தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளித் திருநாள் உள்ளிட்ட சகல பண்டிகை காலங்களில் வீடுகளிலும் பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் விழா எடுக்கும் காலப்பகுதியில் பாடசாலை மாணவர்கள் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டு பயன்பெற்று வருவது காணக்கூடியதாக உள்ளது. கோவில் தொண்டுகள் செய்வதிலும் மாலைகள், தோரணங்கள் கட்டுவதிலும் கோலங்கள் போடுவதிலும் மிக்க ஆர்வம் மிக்கவர்களாகக் காணப்படுகின்றனர். பொது வைபவங்களின் போது திருமுறைகளை முறையாக ஓதுவதற்கும் அதிக மாணவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கலாசார சீரழிவுகளின் உபாதைகளிலிருந்து எம்மைக் காப்பாற்றுவதற்கும் கலாசார நிகழ்வுகளில் எதிர்காலச் சந்ததியினரை ஈடுபாடு செய்ய வைப்பதற்கும் இவ்விழா உந்துசக்தியாக இருந்து வருவது கண்டு கல்விச் சமூகம் பெரு உவகை அடைவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. கடந்த காலங்களில் பாடசாலை மாணவர்களிடையே சமய சம்பந்தமான போட்டிகளை பாடசாலை, கோட்ட, வலய மட்டங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தி திறமை பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் அள்ளி வழங்கி மேலும் மாணவர்கள் இப்பணியில் இணைத்துக் கொள்ள முயற்சிப்பது போற்றுதற்குரியது. எதிர்காலச் சந்தத்தியினர் பண்புள்ள மக்களாகவும் தமது கலாசாரத்தை பேணிக் காக்க வல்லவர்களாகவும் பயிற்சி பெற்று வளர்ச்சியுற வேண்டுமென்ற பேரவாவின் காரணமாக இப்பணியை முன்னெடுத்து வருகின்ற கல்விச் சமூகத்திற்குப் பணிகள் செய்கின்ற திருவாளர்கள் ப.விக்கினேஸ்வரன், அ.தற்பரானந்தன், ஆ.வ.கணேசலிங்கம், சி.செல்லையா, நா.சண்முகசுந்தரம் ஆகியோரிற்கு சைவ மக்களாகிய நாம் என்றும் கடப்பாடு உடையவர்களாக இருப்போமாக.

மேலும் இவ்விழாக்கள் மிகச் சிறப்புற நடாத்துவதற்கு பல வழிகளிலும் பொருளுதவி, பண உதவி புரிந்து இன்றுவரை எம்மை உற்சாகப்படுத்தி வருகின்ற

சச்சியா இரும்பகம் வட்டுக்கோட்டை,
சந்நிதியான் ஆச்சிரமம் தொண்டமனாறு,
திருமொழி அச்சகம் சங்கானை,
சரணியா ஓவ்(f)செற் பிறின்ரேஸ் சங்கானை,
வட்டு வாலிபர் சங்கம் வட்டுக்கோட்டை,
ஸ்ரீ காயத்திரி பீடம் திருநெல்வேலி,
ஸ்ரீ கதிர்வேலாயுத ஆலயம் காலையடி பண்டத்தரிப்பு,
மூளாய் இந்து இளைஞர் மன்றம்,
பண்ணாகம் பொது அமைப்புக்களும் சமூகத்தவர்களும்,

ஆகியோருக்கு சைவ கலாசாரப் பேரவை நன்றிகளைக் கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றது.


மேலும் மனனப்போட்டிகள், பண்ணிசைப் போட்டிகள், நடைபெறும் காலங்களில் போட்டிகளைத் திறம்பட நடாத்துவதற்கு பல கல்விக் கோட்டங்களிலிருந்தும் சமூகமளித்து மத்தியஸ்தர்களாக கடமையாற்றியவர்களுக்கும் பல இடங்களில் நடைபெற்ற விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கு சகல வழிகளிலும் பங்களிப்புச் செய்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சமயத் தொண்டு நிறுவனங்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் சைவ கலாசார பேரவையினர் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சங்கானைக் கல்விக்கோட்டம். **—விழாக் குழுவினர்—**
29.10.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுந்
சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

மலர் வெளியீடு அனுசரணை :-

**சச்சியா இரும்பகம்**

தெல்லிப்பளை வீதி, வட்டுக்கோட்டை.

வெளியீடு:-

**சைவகலாச்சார மேம்பாட்டுப் பேரவை,**
சங்கானைக் கல்விக் கோட்டம்.

சரணியா ஓவ்(f)செற் பிறின்ரேஸ், காசிப்பிள்ளை கட்டிடம், சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org